ரிஜிஸ்டர் நெ. 1279 போஸ்ட் பாக்ஸ் நெ. 346 டெலிபோன் நெ. 2531

DRAVIDAN

திராவிடன்

நாடோறும் வெளிவருவது

ஆசிரியர் திரு. சனக சங்கர கண்ணப்பர்.

மலர்–14] சென்னை சுக்லஹு வைகாசிமீ 14உ 1929ஹு மேமீ 27உ திங்கட்கிழமை [இதழ்–37

கன்னிமேயோ

எழுதிய

சாமிகளின் அடிமைகள்

திரிசிரபுரம் ஆ. நடராஜன் மொழிபெயர்த்தது.

தேவதாசி

இந்தியாவில், தமிழ்நாட்டுக் கோயில்களின் திருப்பணிக்காக வாழ்க்கைப்பட்ட நடன மங்கையர்களைத் தேவதாசிகள் என்று வழங்குவர். பொது வழக்கில், இவர்களை விபசாரிகள் என்றே கூறுவார்கள். புகழ் வாய்ந்த ஒவ்வொரு கோயிலிலும், இத்தகைய தேவ மாதர்களின் படை ஒன்றிருக்கக் காணலாம்.—ஜே. ஜி. பிரேசர்; போற்கிலை; அடோனிசு, ஆட்டிசு, ஆசிரிசு; முதற் பகுதி, 61ம் பக்கம்.

மாகாண கவர்னர் சுற்றுப்பிரயாணம் செய்து வந்தனர். இங்கிலாந்திலிருந்து வந்த இவர் மனைவியும் உடன்போந்திருந்தனள். இவள் கோரிக்கைப்படி, புகழ் சிறந்த பழைய கோயில் ஒன்றைக் கவர்னர் பார்த்து வருவதாக ஒப்புக்கொண்டார்.

எனவே, கோயிற் குருக்கள்மார் கவர்னரையும் அவர் மனைவியையும் மிகுந்த மரியாதையுடன் இந்துக்கள் அல்லாதார் ஒரு கோயிற்குள் எவ்வளவு தூரம் நுழையலாமோ, அவ்வளவு தூரம் அழைத்துச் சென்றனர். மரியாதைக்கு மரியாதையாக கவர்னர் மனைவியும் கோயிற் கட்டிடத்தின் அருமை பெருமையினையும், சிற்ப வினைத் திறமையினையும் புகழ்ந்துரைத்தாள். இக்கோயில் மாரியம்மன் கோயில்; அங்கிருந்த சிலையின் மார்பில் புளித்துப் போன வெண்ணெயின் நாற்றமும், வைசூரியின் நினைவும் கவர்னர் மனைவியின் நெஞ்சத்தில் ஓர் வகை வெறுப்பை இழைத்தது. மேலும் அன்று கோடை வெப்பம்; தொண்ணூறு புள்ளிகள் வரையில் இருந்தது.

இந்த இடத்தினின்றும் விடுதலை பெற விரும்பிய இவள், தனது வெறுப்பைப் பிறர்க்கு அறிவித்துக்கொள்ளாமல், இசைக் கருவிகள் ஒலிக்கும் மண்டபம் நோக்கி மெல்லத் திரும்புவாளானாள். சுற்றுங்கள் செறிந்த அம்மண்டபத்தில் கவர்ச்சியை விளைக்கத்தக்க ஓர் காட்சியைக் கண்டாள். தேவதாசிகள் கூட்டம் ஒன்று! அழகு வாய்ந்த முகத்தினர், அழகு வாய்ந்த உடையினர், அழகுவாய்ந்த தோற்றத்தினர்; இசைக் கருவிகளின் இன்னிசைக்கொப்ப நடித்துக் கொண்டிருந்தனர்.

பிறகு இக்கூட்டத்தினின்றும், ஒரு தேவ லோகப் பெண் போன்ற ஓர் உருவம் பிரிந்து வந்தது. ஓர் குழந்தை—பொற்சரிகை இழைகளால் பூவேலை செய்யப்பெற்ற, நீண்டதோர் வெள்ளைத் தானை அணிந்திருந்தாள். சிறந்த அணிகலன்கள் இவள் கழுத்தையும், கைகளையும், கணுக்கால்களையும் சுமத்தித் திகழ்ந்தன. கொண்டையில் மலரணிந்திருந்தாள். இவள் உடல் மிகவும் நலிந்திருந்தது; பட்டைபோன்ற கன்னங்கள் சிவப்புப் "பவுடருக்"கடியிலும் வெளுத்திருந்தன. முகத்தில் சோர்வு விழுந்து காணப்பெற்றது. இதனால் இவள் பருவத்தின் உயர்வும், அறிவின் முதிர்ச்சியும் பன்மடங்கு பெருக்கித் தோன்றின. இவள் கவர்னரின் மனைவியின் முன்பாக ஒரு மலர்மாலையை ஏந்தி நின்றனள். இருவர் கண்களும் ஒருமித்தன.

இமைப்பொழுது இருவரும் ஒருவரை ஒருவர் உற்று நோக்கியவண்ணமாய் இருந்தார்கள்— கவர்னர் மனைவி இக்குழந்தையின் உள்ளத்தையே, துருவி ஆராய்ந்தாள்; குழந்தையும் இதற்குடன் பட்டாற்போன்று நின்றது. பின்னர், இந்த நிலைமை மாறியது; விழித்தெழுந்தவள் போன்ற இச்சிறுமி, பெருமூச்செறிந்து தன்னிடம் திரும்பிச் சேர்ந்தாள். பூசாரிகள் தங்கள் விருந்தினர்களை (கவர்னர்; அவர் மனைவி) வேறு காட்சிகளைக் காண்பிப்பான் அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

லட்சுமி என்னும் இச்சிறுமி, தனது நான்காம் ஆண்டிலிருந்து சிற்சில நிகழ்ச்சிகளை நினைவிற்குக் கொண்டுவரும் ஆற்றலைப் பெற்றிருந்தாள். இப்பொழுது இவளுக்கு ஏழு வயதாயிற்று. தன் தாயின் நினைவு தன் உள்ளத்தில் ஊன்றி நிலைத்திருக்கின்றது. தாயின் அழகிய முகம் ஒரு உயர்தரப் பார்ப்பனியின் முகம். ஓர் நாள் அவள் அழுத அழுகை இன்னும் மறக்க முடியவில்லை.

'என் கண்ணே! உன் வாழ்க்கை என்னாகும்! ஏழைக் கைம்பெண்ணாகிய நான் உனக்கு வரதட்சணை அளிப்பது எங்ஙனம்? வரதட்சணை அளிக்காமல் உன்னை மணம்புரிந்து கொடுப்பது எப்படி? மணம் புரியா வாழ்க்கையிலும் இறப்பதுமேலன்றோ? இதைவிட கெட்ட கேடும் உண்டோ?'

பிறகு தன் தாய்க்குக் காச நோய் கண்டதும், அவள் இருமிக் கொண்டிருந்ததும், அந்நோய் நாளுக்குநாள் மிகைப்பட்டதும் லட்சுமிக்கு நினைவுண்டாயிற்று. சிற்சில வேளைகளில் மருத்துவச்சி வந்து மருந்தளித்ததும், அந்த வெள்ளை மருத்துவச்சி ஓர்நாள் தன்னை அவள் வீட்டிற்கெடுத்துச் சென்றதும் கனவுபோல் தோன்றியது.

பின்னர் ஓர் நாள்—ஒரு பெரிய அகலமான வெளிச்சமான அறை; ஆங்குப் பல பேர் மண்டியிட்டவண்ணமாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தனர். வெள்ளை மருத்துவச்சியைக் கேட்டனள்; வெள்ளை மருத்துவச்சியும் 'கர்த்தாவே! எங்கள் இருளைப் போக்கி, மற்றைய இடையூறுகளினின்றும் விலக்கி, தங்கள் ஒரு மகனும் இயேசு கிறிஸ்துவின் ஆணைப்படி எமக்குக் கருணை புரியுங்கள் என்பதின் பொருள்தான் இது' எனக் கூறினள்.

இந்த நினைவும் மறத்தற்பாலதன்று ஆங்கிலத்தில் மொழிந்த உரைகள் பலவும் இவள் மூளையில் நன்கு பதிந்திருந்தன.

சின்னாட்கள் கழிந்தன; அருமைத் தாயின் நிலைமை கொடியதாயிற்று. வெள்ளை மருத்துவச்சியும் வரவில்லை. ஆனால், அது போது உயர்ந்த உடைகளையும் அணிகலன்களையும் தரித்த ஓர் அழகிய இந்தியப் பெண் வந்திருந்தாள். இவள் ஒரு தேவதாசி. பல அற்புதக் கதைகள் செப்பினள். அவள் லட்சுமியின் தாயைப் பார்த்து,

'உன் பயணம் நெருங்கி விட்டது. நீ லட்சுமியை எனக்களித்து விடு. நான் அவளைக் கடவுள்களுக்கு மணம் புரிந்து கொடுத்து விடுகின்றேன். அவளுக்கு அழகிய உடைகளையும், நகைகளையும் நல்கி, பிறர் புகழுக்கும் பெருமைக்கும் இலக்காக்குகின்றேன். அவள் என்றும் சுமங்கலியாய் இருப்பாள். உன் போல், கைம்பெண்ணாகும் இழிநிலை அவளுக்கு ஏற்படாது. அவளை மொட்டைச்சி என்று பிறர் அபசகுனமென வெறுக்கார்கள்.

'நல்ல சிவப்பு; கூரிய மூக்கு; அழகும் களையும் உள்ள முகம்; என் கையில் விட்டுவிடு; இங்குள்ள பணக்காரப் பார்ப்பனர்களெல்லாம் இவள் அழகில் அழியும்படிக்குச் செய்து விடுகின்றேன். இவள் பாதங்களில் பொன்னும் புகழும் இறைத்து அஞ்சலி செய்து நிற்கும்படிக்குச் செய்கின்றேன். இவளை எனக்களித்து விடு?' என்றாள்.

லட்சுமி என்னமோ என்று அஞ்சி, தன் தாயின் கால்களை இறுகத் தழுவிக் கொண்டாள். 'அம்மா என்னை அனுப்பிவிடாதே!' என்றழுதாள். இவளுடன் கூட அன்னையும் கதறினள். என்றாலும், அன்னை, 'நான் உடம்படுகின்றேன். நான் இனி ஒன்றியாய்ப்போக வேண்டியவள்தானே. என் மனது இடந்தரவில்லை; என்றாலும் சாமிகட்குப் பொட்டுக் கட்டுவது நன்மையாய் இருக்கலாம் அன்றோ' என்று மொழிந்தாள்.

'ஆயின், இதோ! இதனை வைத்துக் கொள்ளுங்கள். இது எனது சுப தக்ஷிணையாகும். இதைவிட கடவுளுக்குப் புரியும் நற்கடன் வேறுளதோ?' என்று கூறி தாசி லட்சுமியின் அன்னை[illegible] கையில் சில பொற்காசுகளை அளித்த[illegible]

பிறகு லட்சுமி [illegible] இத்தேவதாசியுடனே [illegible] ஆடியாடி அசைந்து தகசந்து செல்லும் ஓர் மாட்டு வண்டியில் தேவதாசியின் மடி மீதே கண்ணயர்ந்துபோனள்.

ஒரு கோயில்; ஆங்கு அழகிற்சிறந்த பல சிறுமிகள் சாமிகட்கு மணம்புரியும் பொருட்டு வளர்க்கப்பெற்று வந்தனர். இவர்கள் எல்லாம் அழகிலும் தோற்றத்திலும் உயர்வாகவே பொறுக்கி எடுக்கப் பெற்றிருந்தனர். நாள் தவறாமல், இவர்களின் உடம்புகளின் மீது எண்ணெய் தடவித் தேய்த்து இவர்களின் உறுப்புகளை வளையும் படிக்குச் செய்து, இவர்கட்கு நாட்டியமும், படிப்பும், பாடல்களும் பயிற்றி வந்தார்கள். ஆதலாற்றான், பழமை வாய்ந்த இந்தியாவில், இப்பொழுது ஏனைய வகுப்பார்களைப் பார்க்கிலும், தேவதாசிகளே அதிகப்பயிற்சி அடைந்திருக்கின்றார்கள். என்றாலும், சாமிகளின்மீது பாடப்பெற்ற பல பாடல்களில் லட்சுமி வெறுப்படைந்தாள்.

'நான் இனிபாடம் செய்யமாட்டேன்'

'மாட்டாயோ?'

உடனே தேவதாசி லட்சுமியைக் கசை கொண்டு அடித்தாள்.

ஏனைய குழந்தைகள் எப்படியாவது கற்று வந்தனர். தாரை—பத்து வயது சென்றவள்; பெரியவள்; பணக்காரத் தந்தையை உடையவள்; கடவுள்கட்குப் பொட்டுக்கட்டிக்கொள்ளுமாறு கொடையளிக்கப்பெற்றவள்; இதன் நற்பயனுப் தன் தந்தைக்கு ஓர் ஆண்மகன் ஏற்படும் என்பதாகக் கருதப்பெற்றவள்—இவளும் பாடம் கற்று வந்தாள்.

இவள் ஓர் நாள் லட்சுமியைப்பார்த்து 'உனக்கு ஒன்றும் தெரியவில்லை. எனக்கு எல்லாம் தெரியும். நான் உன்னைப்போல் ஒரு கோழை அல்ல. என்னை அவர்கள் வற்புறுத்த முடியாது; வேண்டுமென்றால் நீயே பார்' என்றாள்.

அன்றிரவு உள்ளறையிலிருந்து ஒரு குழந்தையின் வீறிட்ட ஓசை கேட்டது. முதலில் அக்குரல் கோபக் குரலாய் இருந்தது; பின்னர் அது துன்பம் பொறுக்க ஆற்றாது கதறுவதாகக் காணப் பெற்றது.

'அவள் தான் எசலி. இவ்வளவு இளமையில் அவளை அவன் தனக்குட் படுத்தினது மிகவும் அறிவற்ற செயல். வளர்ச்சியிலேயே அழிப்பதற்குரியவள் அல்லள் அவள்' என்று லட்சுமியின் வளர்ப்புத் தாய் கூறினாள்.

ஆனால் தாரை, 'எசலி மிகவும் அழகியவள். உன்னைவிட இளையவளாய் இருந்தால் என்ன? இளமை அவளைக் காப்பாற்றவில்லை. குருக்கள் காத்திருக்க மறுக்கின்றார்; நான் முன்னம் கூறியதை நினைத்துக்கொள்; நான் எவ்விதம் என்னைக் காப்பாற்றிக் கொள்ளுகிறேன் என்றுபார்' என்று ஓசைபடாமல் லட்சுமியின் காதில் மொழிந்தாள்.

தாரை மறுநாள் அங்கு ஓர் கிணற்றில் விழுந்து பிணமாய்க் கிடந்தாள்.

லட்சுமிக்கு நாட்டியப் பயிற்சி அளிக்கப் பெற்று வந்தது. நாட்டியத்திற்குரிய அபிநயங்களின் பொருளை ஒருவாறு லட்சுமி மனதில் உணர்ந்து வெறுப்படைந்து வந்தாள். முதனாள் கோயிலில் அரங்கேற்றும் போது அந்நமுழக்கத்தினிடை, முன்னர் வெள்ளை மருத்துவச்சியுடன் சென்று கண்ட காட்சி இவள் கண்முன் நின்றது.

'எமது இருளைப் போக்குங்கள்—கர்த்தாவே உமமைப் பணிந்து முறையீடு புரிகின்றோம். தங்கள் ஒரே மகனுப இயேசு கிறிஸ்துவின் ஆணை— எம்மைக் காப்பாற்றுங்கள்' என்று முணுமுணுத்தாள். இவள் தன் நினைவு அற்றிருப்பதை அறிந்த மற்றைய தேவதாசிகள் இவளை இரத்தம்பெருகக் கிள்ளினார்கள்.

இப்பொழுது இவளுக்கு ஏழு வயதாயிற்று. இதற்குள் பொட்டுக்கட்டியாயிற்று. எசலியின் கதியை இதுவரையில் அடையவில்லை என்றாலும் ஓர்நாள் அடைவது சத்தியம். இதனை நினைந்து இவள் நெஞ்சழிந்தாள்.

பின்னர், இந்தக் கோயிலிலேயே, கோயிலின் கர்ப்பக்கிரகத்தின் முன்னிலையிலேயே, இவள் மனதில் ஓர் தோற்றம் உதித்தது. ஓர் கூப்பாடு பிறந்தது.

எனவே, இவள் என்னைக் கூப்பிட்டு விட்டாள் நான் போகவேண்டும். காலம் தாழ்த்துதல் கூடாது. என்று கோயிலை விட்டு வெளியே ஓடுவாளாயினள்.

ஆனால் இவளைப் பல தேவதாசிகளும் பார்ப்பனப் பூசாரிகளும் பின் தொடர்ந்து சென்றனர். ஓடோடிப் பார்த்தாள். பார்ப்பனர்கள் நெருங்கிவிட்டனர். இனி அவர்கள் கைகளிற்சிக்கி, தாசித்தொழிலிலேயே ஈடுபட வேண்டியதுதான். என் செய்வாள்!

இதுபோது, ஒரு வெள்ளை மாது இவள்முன் தோன்றி, இவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

பார்ப்பனர்கள், இவள் எங்கள் கோயில் தாசி, இவளைவிட்டு விடு என்றார்கள்.

'இவள் இயேசுவின் பேரால், எங்கள் உதவியைத் தேடிவிட்டாள். நான் இவளை உங்கள்பால் சேர்க்க மறுக்கின்றேன்' என்றாள் வெள்ளை மாது.

பின்னர், இவள் கிறிஸ்துவ மதத்தில் சேர்க்கப்பட்டுவிட்டாள். கிறிஸ்துவக் கோயிலில் இவள் நடமாடவும், பாடவும், குருக்கட்கு காமப் பெண்டிராகவும் வேண்டிய கட்டுப்பாடு கிடையாது.

வெள்ளை மாது, நாளிதுவரையில், கோயில்களுக்கு அடிமைப்பட்ட இக்குற்றச் சிறுமிகளை மீட்கும் தொழிலிலேயே இருந்து வருகின்றாள்.

சுயமரியாதையே — — சுகவாழ்வு

அகில இந்திய சமஸ்தானக் குடிகள் மகாநாடு

கொச்சி, மே, 24

பட்டலர் கமிட்டி அறிக்கை முதலிய முக்கிய காரியங்களைக் கவனிக்க அகில இந்திய சமஸ்தானக் குடிகள் மகாநாட்டுக் கூட்டமொன்று விரைவில் நடைபெறுமென்று தெரிகிறது.

மெல்போர்ன் வேலை நிறுத்தம்
முதலாளிகள் சமரச யோசனை நிராகரிக்கப்பட்டது.

மெல்போர்ன், மே, 24

முதலாளிகள் இந்தவேலை நிறுத்தத்தை ஒழுங்குபடுத்துவதற்காக இருகட்சியையும் சேராத அன்னியர்களைக் கொண்ட ஒரு பஞ்சாயத்தாரைக்கொண்டு இந்த தகராறுகளை விசாரித்து அவர்கள் கூறும் தீர்ப்புக்குகட்டுப் பட வேண்டுமென்று மரத் தொழிற்சாலை முதலாளிகள் ஆலோசனை கூறினதை தொழிலாளர் நிராகரித்து விட்டார்கள். இந்த வேலைநிறுத்தம் ஆரம்பித்து மூன்று மாதம் ஆகிறது.

பிரஞ்சு மார்ஷால் பட்டம்
இனி இந்தப்பட்டம் கிடையாது

பாரிஸ், மே, 24

சென்ற ஐரோப்பிய யுத்தத்தில் போர் புரிந்த 7 பெயர் பெற்ற சேனாதிபதிகளுக்கு பிரான்சு நாட்டில் மார்ஷால் என்ற உயர்பட்டம் வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பட்டம் பெற்ற எழு சேனாதிபதிகளில் இப்பொழுது ஜாப்ரே, பெட்டெய்ன், பிரான்சட், டெஸ்பர்சி ஆகிய 4 பேர் மாத்திரம் உயிருடனிருக்கின்றனர். இப்படி மகா யுத்தத்தில் போர் புரிந்த பெரிய தளபதிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த இந்த மார்ஷல்பட்டத்தைசமாதான காலத்தில் மற்றவர்களுக்குவழங்குவதனால் அந்தப் பட்டத்துக்கு மதிப்பு இல்லாமல் போய்விடுமென்று அந்தப்பட்டத்தை இனி யாருக்கும்வழங்குவதில்லையென்று பிரஞ்சு சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்

ஸ்பானிய புரட்சிக்காரர்
மரணதண்டனைக்கு சிபார்சு

மாட்ரிட், மே, 24

இந்த ஜனவரி மாத கடைசியில் நடந்த கலகத்தில் சம்பந்தப்பட்ட 33 ராணுவ உத்தியோகஸ்தர்களும், 3 சிவில் உத்தியோகஸ்தர்களும் சியுடாட் ரீயலில் விசாரிக்கப்பட்டனர். அவர்களில் 8 பேருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டுமென்றும், மற்றவர்களுக்கு ஆயுள் பரியந்தம் காவல் தண்டனை விதிக்க வேண்டுமென்றும் சர்க்கார் தரப்பு வக்கில் கேட்டிருக்கிறார்.

ஓர் திருமணம்:— சென்னை இந்திய மருத்துவக் கல்லூரி ஆசிரியர் உயர்திரு. வல்லை சண்முக சுந்தர முதலியாரவர்கள் மகன் திரு. வல்லை. பாலசுப்பிரமணிய முதலியார் பி. ஏ. அவர்களுக்கும் சென்னை தந்தி ஆபீசு தலைமை குமாஸ்தா உயர்திரு. வி. மாணிக்க முதலியாரவர்கள் மகள் திருவளர்செல்வி ஜலஜாக்ஷி அம்மாளுக்கும் சென்னை நேபியர் பார்க்கு சிந்தாதிரிப் பேட்டை ஹைஸ்கூலில் சென்ற 19ந் தேதியன்று திருமணம் நடைபெற்றது. அப்போது சென்னைப் பிரமுகர்கள் அனைவரும், எல்லா வகுப்பார்களும் வந்து மணமக்களை வாழ்த்தினர். மணமக்களுக்கு அவர்கள் நண்பர்களும் உறவினரும் விலைபெற்ற வெகுமதி பல அளித்தனர். அன்று மாலை தேர்கச்சேரிக்குப் பின் பெங்களூர் மிஸ் நாகரத்தினம்மாள் பாட்டுக் கச்சேரியும் மிகச் சிறப்பாய் நடைபெற்று பந்தல் மிக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அ. இ. கா கமிட்டி கூட்டம்

நிறைவேறிய தீர்மானங்கள்

பம்பாய், மே, 24

காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி இன்று கூடியதும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தீர்மானங்களைப்பற்றி விவாதிப்பதிலேயே அது தனது நேர முழுமையும் கழித்தது. தமிழ்நாட்டுத் தலைவர்கள் தங்களுடைய தீர்மானங்களை வாபீஸ் வாங்கிக் கொள்ள விரும்புவதாகத் தெரிகிறது. ஆனால் அவர்களுடைய தீர்மானங்கள் எல்லோருக்கும் பகிரங்கப்படுத்தப்பட்டிருப்பதாலும், அவற்றைக் குறித்துப் பலமான வாதங்கள் நடைபெற்றுவருவதாலும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அத்தீர்மானங்கள் மீது ஒரு முடிவான அபிப்பிராயத்தைக் கூறிவிட வேண்டுமென்று பொதுவான அபிப்பிராயமிருந்துவருகிறது.

இச்சமயம் வைசிராய் இந்தியா சட்டசபையின் காலத்தை நீடிக்கச் செய்திருப்பதாக ஒரு செய்தி கிடைத்தது. இதில் வைசிராய் தம்முடைய அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்திருப்பதாகவே கமிட்டி மெம்பர்கள் பொதுவாகக் கருதுவதாகச் சொல்லப்படுகிறது.

மாலையில் மீண்டும் 2 மணிக்குக்கூடும் பொருட்டு கமிட்டி உடனே கலைந்தது. அப்போது வைசிராய் இந்தியா சட்டசபைக் காலத்தை நீடிக்கச் செய்திருப்பதைக் குறித்துக் வாதிக்கப்படும். ஆகையால், மாலை கூட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தீர்மானங்கள் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்கு முன்பு வராது. ஆனால் தொழிலாளர் தலைவர்களை ஒரே மொத்தமாகக் கைதுசெய்யப்பட்டதை யொட்டி தேசத்தில் ஏற்பட்டிருக்கும் ராஜீய நிலைமையைக் குறித்து விவாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நிர்வாகக் கமிட்டி மாலையில் கூடவில்லை

[illegible]

யாகும் ஒரு நிர்வாகி அவ்விதம் நடந்துகொண்டால் அவரை உத்தியோகத்திலிருந்து நீக்குவதுடன், ஒரு குறிப்பிட்ட காலம்வரை அவர் எந்தக் காங்கிரஸ் கமிட்டி தேர்தலுக்கும் நிற்கவிடாமல் செய்வதே அவருக்குத் தண்டனையாகும். அகிலஇந்திய காங்கிரஸ் கமிட்டிமுன்பாகவோ, அல்லது நிர்வாகக்கமிட்டிமுன்பாகவோ, ஒருவர் அல்லது கமிட்டிமீது கொண்டுவரப்பட்ட குற்றங்களுக்குச் சரியான முகாந்திரம் கூறும்படி அவர் அல்லது கமிட்டிக்குப்போதுமான சந்தர்ப்பம் அளித்தபின்பு அவரை எந்த காங்கிரஸ் கமிட்டி தேர்தலுக்கும் ஒரு குறிப்பிட்ட காலம்வரை நிற்க முடியாதபடி செய்யவும், அல்லது தேசிய காங்கிரஸ், அல்லது மாகாண காங்கிரஸ் பிரதிநிதிகளாகவோ, தேர்ந்தெடுக்க முடியாதபடி செய்யவும் கமிட்டிக்கு அதிகாரமுண்டு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடாமற்போனால் அதன் ஆலோசனைக்குட்பட்டு நிர்வாகக் கமிட்டி அவசர கேஸ்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. இத்தீர்மானத்திற்குப் பலமான எதிர்ப்பு இருந்தது.

திரு. விஸ்வநாதன் (ஆந்திரா) அ. இ. கா. கமிட்டி முடிவிற் குட்பட்டு அத்தகைய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள மாகாண கமிட்டிகளுக்கு அதிகாரமளிக்கப்படவேண்டுமென விரும்பினார்.

தமிழ்நாடு மெம்பர்களில் பலர் இத்தீர்மான மின்றியே அ. இ கா. கமிட்டிக்கு அத்தகைய நடவடிக்கைகள் எடுக்க அதிகாரமிருக்கிறது என்ற காரணத்தைக் கொண்டு தீர்மானத்தை எதிர்த்தார்கள்.

திரு. அண்ணாமலை பிள்ளை கூட்டத்தில் தமிழில் பேசியது பெருத்த நகைப்புக்கிடமாயிருந்தது. அவர் மாகாண கமிட்டிகளுக்கு அத்தகைய அதிகார மிருக்க வேண்டு மெனக் கூறினார்.

மற்றொரு தமிழ் நாட்டு மெம்பர் தமிழில் பேசயத்தனித்த போது பண்டித ஜவஹறிலால் நேரு மெம்பர்கள் ஹிந்தியில் பேச வேண்டு மென்றார்.

[illegible]

மான்மத் குண்டு வழக்கு

டிப்டியூ இன்ஸ்பெக்டர் ஜெனரல் சாட்சியம்

மனமோஹன் எழுதிய கடிதம்

நாசிக், மே, 24

இன்று மான்மத் குண்டு வழக்கில் ராமநாத்காத்தாராவில் வசிக்கும் ஹீராலால் என்னும் தச்சன் முதலில் சாட்சியம் கூறினான். அவன் தாம் மார்க்கண்டேயன் இருப்புச்சம்பியினால் ஏதோ செய்துகொண்டிருப்பதைப்பார்த்ததாகவும், அவர் என்ன செய்கின்றார் என்று கேட்டதற்குத் தாம் பொய்த் துப்பாக்கி செய்வதாய் கூறினதாகவும், அவர் பக்கத்தில் ஒரு கைத்துப்பாக்கி கிடந்ததையும் பார்த்ததாகவும் கூறினர்.

டிப்டியூ இன்ஸ்பெக்டர் ஜெனரல் சாட்சியம்

அலகபாத் துப்பறியும் இலாக்கா அசிஸ்டெண்ட் டிப்டியூ இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு ஈ. ஜி. பி. பீல் இரண்டாவதாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

நான் 1926 முதல் டிப்டியூ இன்ஸ்பெக்டர் ஜெனரலாக வேலை பார்த்து வருகின்றேன். எனக்கு ராய்பகதூர் பானர்ஜியையும் மனமோஹன் குப்தாவையும் தெரியும். மனமோஹன் குப்தாவின் சகோதரர் காக்கோரி குண்டு வழக்கில் தண்டனை யடைந்துள்ளார். மனமோஹன் குப்தாவை துப்பறியும் இலாகாவிற்கு உளவாளியாக 1928-ல் மே மாதம் மத்தியில் சேர்க்கப்பட்டது. மனமோஹன் மான்மத் குண்டு வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பதாய் சப் இன்ஸ்பெக்டர் பிரமா சிக என்னிடம் வாய் மொழியாய் தெரிவித்தார். நான் இரண்டாம் குற்றவாளியைத் தேடி காசிக்கும் போகும்படி அவருக்குக் கூறினேன். மனமோஹனை அக்டோபர் 30-ந் தேதி முதல் நீக்கி விடும்படி கூறப்பட்டது. இரண்டாம் எதிரியுடன் எவ்விதமான சம்பந்தமும் வைத்துக் கொள்ள வேண்டாமென ராய்பகதூர் பானர்ஜிக்கு வாய்மொழியாகத் தெரிவிக்கப்பட்டது. மனமோஹன் துப்பறியும்ஆபீசர்களுடன் கடிதப்போக்குவரத்துச் செய்வதில் ராம்கில்வான் என்று கைசாத் திடுவான். பின்பற்றிச்சென்ற வித்தியார்த்தி என்பவன் ஓர் கலகப்பேர் வழி. அவன் பம்பாய் சென்றுகொண்டிருந்தான்.

மனமோஹன் கடிதம்

துப்பறியும் [illegible]ழாத்தில் வழங்கப்படும் ராம்கில்வான் [illegible]னும் கையெழுத்திட்டு மனமோஹன் தா[illegible] பம்பாய் செல்வதாய் ராய்பகதூர் பானர்ஜிக்கு கடிதமெழுதியிருந்தான்.

திரு. லால் குறுக்குக் கேள்வி கேட்டபோது அவர் பின்வருமாறு கூறினர்:— மனமோஹனுக்கு மே மாதம் மத்திமுதல் அக்டோபர்முடிவுவரைமாதமொன்றுக்கு ரூ. 60 கொடுக்கப்பட்டது. அவன் அக்டோபர் 8ந்தேதி பின்வருமாறு கடிதம் எழுதியிருந்தான்:—“நான் வித்தியார்த்தியைப்பின்பற்றிச்செல்லப்போகின்றேன். என்னைப்பற்றி நீங்கள் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நீங்கள் தான் என் தகப்பனர், நான் உங்கள் புதல்வன் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எப்பொழுதும் என்னைப்பற்றி ஜாக்கிரதையாயிருப்பீர்கள். அவனைபின் தொடர்ந்துபோவதற்கு என் செலவிற்கு ரூ. 300 வைத்து வையுங்கள்”

அடுத்தாற்போல் மார்க்கண்டேயன் வசித்து வந்த ராமநாத் காத்தாரா கட்டிடத்தின் சொந்தக்காரரான ராமநாத்விசாரிக்கப்பட்டார். அவர் ஒரு பஞ்சாயத்தார். அவர் தனக்கு இரண்டு மாதங்கள் வாடகை கிடைத்த தென்றும், கடிகாரங்கள் பழுது பார்ப்பதற்கே தாம் இவ்வறையை அமர்த்தி யிருப்பதாய் மார்க்கண்டேயன் கூறியதாகவும் கூறினர்.

மருந்துக்கடை ஏஜெண்டு சாட்சியம்

அடுத்தாற்போல் காசி,[illegible] மருந்துக்கடை டி. வால்டி அண்டு கம்பெனி ஏஜெண்டு அழூலெ யாசாரன் கோல் விசாரிக்கப்பட்டார். அவர், தாம் எதிரிக்கு 1928 செப்டம்பர் 27ந் தேதி கந்தகத்திராவகம் விற்றதாகவும், அந்த மெமோவில் தாம் கையெழுத்துப் போட்டுள்ளதாயும் கூறினர். அந்த மெமோ மார்க்கண்டேயன் அறையில் இருந்தது. சாட்சி தாம் மருந்துகொடுத்தவரை இணங்கண்டு பிடிக்கவில்லை. கோர்ட்டு இத்துடன் கலைந்தது. மீண்டும் திங்கட்கிழமை கூடும். அன்று பிராசிகியூசன் தரப்பில் இன்னும் இரண்டு சாட்சிகள் விசாரிக்கப்படுவர்.

நேரு, பண்டிதமாளவியா முதலியோர் ஆதரித்தார்கள்.

தலைவர், கமிட்டி மெம்பர்கள் நியமனத்தை காரியக்கமிட்டியின் இஷ்டத்துக்கு விட்டுவிட வேண்டுமெனக் கூறினர். இத்தீர்மானம் நிறைவேறியதும் கூட்டம் மாலை 7-15 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அ. பிரஸ்.

ஈரோடு ஆலயப்பிரவேச வழக்கு.

கோயிலில் நந்திவரை கிறித்தவ வெள்ளைக்காரர் போகலாமாம்

ஹிந்து ஆதித்திராவிடர்கள் கருடஸ்தம்பத்திற்குமேல் போகக்கூடாதாம்

தர்மகர்த்தாவின் சாட்சியம்

(நம் விசேஷ நிருபர்)

ஈரோடு, மே, 23

ஈரோடு ஸ்டேஷனரி சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் சப் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் மே 23-ந் தேதி திங்கட்கிழமையன்று பகல் 12-30 மணிக்கு ஈரோட்டிலுள்ள ஈஸ்வரன் கோயிலில் 1929-ம் ஆண்டு ஏப்ரல் 4-ந் தேதி வியாழக்கிழமையன்று மாலை 7-30 மணிக்கு திரு. ஈஸ்வரன் என்பவர் பசுபதி, கருப்பன் என்ற இரு ஆதித்திராவிட வகுப்பினர்களை அழைத்துக் கொண்டு கோயிலின் உள்ளே சென்றதாக குற்றஞ் சாட்டப்பட்டுக் கொண்டு வரப்பட்ட வழக்கில், வாதிகள் சார்பில் பிராசிகியூட்டிங் இன்ஸ்பெக்டரும், பிரதிவாதிகள் சார்பில் நாகை பாரிஸ்டர் திருவாளர் கே. சி. சுப்ரமணியம் அவர்களும் ஆஜராகி வாதித்தனர். அது சமயம் தர்மகர்த்தா திரு. முத்துநாயக்கர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டார். நடவடிக்கைகளைக் கவனிக்க கோர்ட்டில் ஏராளமான பொது ஜனங்கள் வந்து கூடியிருந்தனர்.

முத்து நாயக்கர்

கே:—ஈஸ்வரன் கோயில் ஈரோடுதேவஸ்தானக்கமிட்டியாருக்குஉட்பட்டதா?

ப:—ஆம்.

கே:—தேவஸ்தானக்கமிட்டியார் இந்துக்கள் எல்லோரும் கோயிலுக்குள் போகலாம் என்று செய்த தீர்மானம் உமக்குத் தெரியுமா?

ப:—தெரியாது. கேள்விப்பட்டேன். ஊருக்குள் சொல்லிக்கொண்டார்கள்.

கே:—தாங்கள் பத்திரிகைகள் படிப்பதுண்டா?

ப:—இல்லை.

கே:—தமிழ் பத்திரிகைகள் கூடவா?

ப:—ஆம்; தமிழ்ப் பத்திரிகைகள் கூட படிப்பதில்லை.

கே:—ஈரோடு தேவஸ்தானக் கமிட்டியின் பிரசிடெண்டைத் தெரியுமா?

ப:—தெரியும். பட்டக்காரர்தான்.

மாஜி:—பட்டக்காரர் என்றால் எத்தனையோ பட்டைக்காரர் உண்டே, எந்தப் பட்டக்காரர்?

ப:-பழைய கோட்டைப் பட்டக்காரர்.

கே:—அவர் உமக்குச் சொந்தமா?

ப:—இல்லை.

கே:—தேவஸ்தானக் கமிட்டி வைஸ் பிரசிடெண்டு உமக்குச் சொந்தமா?

ப:—ஆம், சொந்தந்தான்.

கே:—தேவஸ்தானக் கமிட்டித் தீர்மானத்தைப்பற்றி அவர் உங்களுக்குச் சொன்னரா?

ப:—இல்லை.

(பிரா. இன்ஸ்:—அவர் சம்பந்தமில்லாததால் இந்தக் கேள்வி அநாவசியம்)

பிரதி வக்கீல்:— அவர் எதிரிதரப்பில் சாட்சியாதலால் அது அவசியம் தான்.

கே:—பட்டக்காரும் தீர்மானத்தைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் சொல்லவில்லையா?

ப:—இல்லை.

கே:—எப்போது ஊத்துக்குளிக்குப் போனீர்கள்?

ப:—இச்செய்கை நடப்பதற்கு 2 நாளைக்கு முன்னர்.

கே:—எத்தனை நாள் ஊத்துக்குளியிலிருந்தீர்கள்?

ப:—7, 8 நாள்கள் வரை இருந்தேன்.

கே:—எப்போது திரும்பி வந்தீர்கள்?

ப:—சனிக்கிழமை இராத்திரி 7-30 மணி வண்டியில் திரும்பினேன்.

கே:—விஷயம் நடந்த அன்று நீங்கள் ஊரில் இருந்ததாகவும், ராஜு என்ற பையன் வந்து கூப்பிட்டதாகவும் சொல்லப்படுவது உண்மை தானா?

ப:—இல்லை.

கே:—குருக்களைக் கூப்பிட்டு வாவென்று மேற்படி பையனிடத்தில் சொல்லவில்லையா?

ப:—இல்லை.

கே:—பண்டரிநாதர்மேல் சத்தியமாய் வெள்ளிக்கிழமை இரவு ஊரில் இல்லையென்று சொல்லமுடியுமா?

ப:— சத்தியமாய் ஊரில் இல்லை. முந்தின நாள் வியாழக்கிழமை யன்றும் ஊரில் இல்லை.

கே:— ஊரிலிருந்து வந்ததும் கோயிலில் நடந்த விஷயத்தைப்பற்றி யார் யார் வந்து சொன்னார்கள்?

ப:—2 குருக்கள்களும், குட்டமேனனும்.

கே:—எத்தனை மணிக்கு வந்தார்கள்?

ப:—சனிக்கிழமை இரவு 8மணிக்கு மேல்.

கே:— நடந்த விஷயத்தைப்பற்றி சொன்னது யார்?

ப:— குருக்கள் 2 பேரும்.

கே:— விவரமாய் ஒன்றும் சொல்லவில்லையா?

ப:— அக்கிரமமாய்ப் பூஜை பண்ணினதாகக் குட்டமேனன் சொன்னான்.

கே:— குருக்கள்கள் பார்த்ததாகச் சொன்னார்களா?

ப:—பார்க்கவில்லை என்று சொன்னார்கள்.

கே:— போலீஸில் எழுதிவைத்தது 2 குருக்கள்களும் சொன்னதைக் கொண்டு தானே?

ப:— ஆம்.

கே:—கோயிலுக்குள் பஞ்சமர்கள் வரக் கூடாது என்றதற்கு ஆதாரமுண்டா?

ப:—வழக்கத்தைக் கொண்டுதான் சொல்லுகிறேனேயொழிய ஆதாரமில்லை.

கே:—அதைத்தவிர சாஸ்திர சம்பந்தமாய் ஏதாவது தெரியுமா?

ப:—தெரியாது.

கே:—மூன்று எதிரிகளையும் தெரியுமா?

ப:—ஒன்று இரண்டு எதிரிகளைத் தெரியும். மூன்றாவது எதிரியைத் தெரியாது.

கே:—உங்களுக்குத் தெரியாத பஞ்சமர்கள் கோவிலுக்குள் வந்தால் எந்தவிதமாய்த் தெரிந்து கொள்வீர்கள்?

ப:—தெரியாதவர்கள் வந்தால் எந்த ஜாதி என்று சொல்லமுடியாது. தெரிந்து இருந்தால்தான் சொல்லலாம்.

கே:—1 வது எதிரி கோயிலில் வரலாமா?

ப:—வரலாம்.

கே:—பஞ்சமர்கள் போவதால் தீட்டு எப்படி வந்தது?

ப:—அவர்கள் வந்தது வழக்கமில்லாத வழக்கமாகையால் தீட்டு என்று நினைத்தேன்.

கே:—வழக்கமில்லாத வழக்கமென்றால் என்ன?

ப:—கோயிலுக்குள் பஞ்சமர்கள் வருவதில்லை. ஆனதால் அது வழக்கமில்லாததால் தீட்டு.

கே:-வெள்ளைக்காரர்கள் இந்துகோயிலில் போனால் தீட்டு உண்டா?

ப:—அவர்கள் நந்திக்குச் சமீபம்வரை வரலாம். அதற்கு அப்புறம்வரக்கூடாது.

பிரா. இன்ஸ்:—சமீபம் என்றால் எதுவரையில்?

ப:—நந்திக்குக் கீழ்புறம் வரை.

கே:—நந்திக்கு எந்தப்புரம் போகக் கூடாது.

ப:—நந்திக்கு மேற்கேபோகக்கூடாது

கே:—உங்களுக்குத் தெரிந்து வெள்ளைக்காரன் நந்தியைத்தாண்டிப்போனதைப் பார்த்திருக்கிறீர்களா?

ப:—பார்த்தது இல்லை.

கே:—சம்ப்ரோக்ஷணைசெய்தால்தான் தீட்டுப்போகும் என்றுஎப்படித்தெரியும்?

ப:—ஊரில் சொல்லுகிற வழக்கத்தைக்கொண்டு.

கே:—அந்தப்படி ஏதாவது கும்பாபிஷேகம்நடந்ததா? எப்பொழுதுநடந்தது?

ப:—ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

கே:—அதற்கு என்ன செலவாயிற்று?

ப:—ஐம்பது ரூபாய்.

கே:—இது விஷயம் தேவஸ்தானக் கமிட்டிக்குத் தெரிவித்திருக்கிறீர்களா?

ப:—ஆம்.

கே:—கோயிலில் யார்யார் வரலாம், வரக்கூடாது என்று ஏதாவது நோட்டீஸ் போட்டிருக்கிறீர்களா?

ப:—இல்லை. இதுவரையில் வழக்கமில்லை.

கே:—2,3 எதிரிகள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள்?

ப:—இந்துக்கள் தான்.

கே:—இந்துக்களாகிய பஞ்சமர்களுக்கு வேறுசாமி எது?

ப:—இதேசாமிதான் வேறுசாமிகிடையாது. கருடஸ்தம்பம் வரையில்வந்து கும்பிட்டுப் போவது வழக்கம்.

கே:—இரண்டு குருக்களைத் தவிர வேறு ஊர் ஜனங்கள் வந்து சொன்னார்களா!

ப:—இல்லை.

கே:—இவர்கள் கோவிலுக்குள் போ

(இதன் தொடர்ச்சி 11ம் பக்கம்பார்க்க)

தமிழ் மாகாண

சுயமரியாதை தொண்டர் மகாநாடு

கொடியேற்ற விழா

பட்டுக்கோட்டையில், 1929 மே, 25, 26 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், நடைபெற்ற, தமிழ் மாகாண சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாட்டில் கொடியேற்ற விழா ஆற்றி திருச்சி திரு. சி. ஆ. வெ. விசுவநாதம் அவர்கள் ஆற்றிய வீர உரை வருமாறு:—

சி. ஆ. பெ. விசுவநாதம்

சுயமரியாதைத் தொண்டர்களாகிய சகோதர, சகோதரிகளே! பெரியோர்களே! அன்பர்களே! இன்றைய நாள் நல்ல நாட்களிற் சிறந்த ஒரு நல்ல நாளாகும். பிற்காலத்தில் எழுதப்பெறுகிற இந்தியாவின் சரித்திரத்தில் இந்த நாளைக் குறிப்பிடாமல் எழுதமுடியாதென்றே நினைக்கின்றேன். ஏனெனில், பிற்காலக் கட்டிடங்களுக்கு இன்றுதான் அஸ்திவாரம் இடப்பெறுகிறது. ஒரு சமயமோ, சமூகமோ, நாடோ, மொழியோ முன்னேற்றமடைந்து வெற்றியடைவதானால் உண்மையான தொண்டர்களின் ஒத்துழைப்பு மிக்க அவசியமாகும். தொண்டர்களின் ஒத்துழைப்பின்றி இதுவரை எந்த இயக்கமும் வெற்றியடைந்ததில்லை. எல்லாவிதத் தொண்டர்களிலும் சமூகச் சீர்திருத்தத் தொண்டர்களே தலைமை வகிக்கத் தகுதியுடையவர்கள் என்பது முற்றிலும் உண்மை. அத்தகைய தொண்டர்களின் மகாநாடு இந்தியாவின் தென்பாகத்திலுள்ள இச்சிறந்த நகரத்தில் இன்றையதினம் கூடுகின்றது.

ஆகவே, இந்த நல்ல நாளில் என்னைவிடத் தகுதிவாய்ந்த சுயமரியாதைத் தொண்டர்கள் பலரிருந்தும் மிகப் பரிசுத்தத்தன்மைவாய்ந்த சுயமரியாதைக் கொடியை உயர்த்துகின்ற மிகப் பொறுப்பு வாய்ந்த இப்பணியை நிறைவேற்றும்படி கட்டளையிட்ட வரவேற்புக் கழகத்தார்க்கு எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

ஒரு கொடியை உயர்த்துவதன் நோக்கம் ஒரு நாட்டு மக்களுக்கு உணர்ச்சியை உண்டாக்குவதேயாகும். அதன்படி நமது சுயமரியாதை இயக்கத்தொண்டர் குழாத்தினர் கொடியை இன்று உயர்த்துவதினால் நம்நாட்டு மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி வீறுகொண்டெழுமென்றே நம்புகிறேன். இந்தக் கொடியானது தஞ்சை ஜில்லாவில் 40 அடி உயரத்திற்குமேல் உயர்த்தப்படினும் ஹிமயமலையின் எவரெஸ்ட் சிகரத்தின் மேல் உயர்த்தியதாகவே கருதப்பெறும். இக்கொடி பறப்பதன் மூலம் உண்டாகின்ற காற்றின் அலைகளுக்கே ஓர்வித வன்மை உண்டாகும். அவ்வன்மை இந்தியாவின் மூலை முடுக்குகளிலுள்ள ஒவ்வொரு இளைஞரின் இரத்தத்திலும் ஓர்வித புதிய உணர்ச்சியை உண்டாக்குமென்றே நம்புகிறேன்.

நமது செங்கற்பட்டு மகாநாட்டுக்குப் பிறகு நம்முடைய இயக்கத்தின் விரோதிகள் மகாநாட்டின் தீர்மானங்களை ஆயுதமாகக்கொண்டு போலி வெற்றுரைகளினால் அவற்றை மாற்றிக்கூறி, பாமர மக்களிடம் சூழ்ச்சிப் பிரசாரத்தைச் செய்யத் தலைப்பட்டுவிட்டார்கள். இவற்றிற்குக் காரணம் சமீபத்தில் வரப்போகின்ற தேர்தல்களேயாகும். ஆஸ்திக சங்கம் என்ற ஒன்றை உண்டாக்கி அச்சங்கமல்லாதவைகளை நாஸ்திக சங்கங்களென்று மாற்றிக் கூறுகிறார்கள். இன்றையதினம் உயர்த்தப்படுகிற இக்கொடியானது அவற்றைத் தூள்தூளாகத் தகர்த்தெறியுமென நம்புகிறேன்.

தொண்டர்கள் மிக்க கட்டுப்பாடுடன் வேலைசெய்தல் வேண்டும். இதற்கு ஒற்றுமையும், மனோவன்மையும் அதிகமாக இருத்தல் வேண்டும். நிதானமான யோசனையின்றி இதுவரை எந்தக் காரியமும் சாதிக்கப்பட்டதுமில்லை, இனி சாதிக்கப்படப்போவதுமில்லை. நாட்டின் விடுதலைக்குப் போராடும் வாலிபர்களின் உள்ளத்தை அவர்களின் சமூகக்கட்டுப்பாடுகளும் கொடுமைகளும் கொலை செய்கின்றன. ஆகவே, நாட்டின் விடுதலையை விரும்புகிற எந்த மனிதனும் சமூக விடுதலையையே முதலில் விரும்பவேண்டியிருக்கிறது. சமூகக் கொடுமையை ஒழிக்காமல் சுயராஜ்யத்தை எதிர்பார்க்கின்ற மனிதனை மனிதத்தன்மையுடைய மனிதனாகக் கருதுவதற்கில்லை. அத்தகைய மனிதர்களின் பேச்சு பாலைவனத்திலிடுகின்ற வெறுங் கூச்சலாகவே முடியும்.

இன்று உயர்த்தப் பெறும் இச்சுயமரியாதைக் கொடியானது சில சொற்களைக் கூறுகின்றது. அச்சொற்களாவன:-சமத்துவம் நிலவுக! வேற்றுமை ஒழிக! அறம் சிறக்க! மறம் அழிக! சூழ்ச்சிகள்சிதறுக! உண்மைகள் விளங்குக! மூடக் கொள்கைகள் அழிந்தொழிக! பகுத்தறிவு விளங்குக! உண்மையான தொண்டர்களே! நாட்டிற்கு நற்பணியாற்றி நலம் பெற்று வாழுங்கள்! சுயமரியாதையே உங்கள் பிறப்புரிமை! என்பவைகளேயாம்.

தொண்டர்களாகிய சகோதரர்களே! நாம் இச்சொற்களை ஏற்று இதன்படித் தொண்டுசெய்ய முன் வருவோம். உடல் பொருள் ஆவி, ஆகிய இம்மூன்றும் இந்த இயக்கத்திற்காகவே நம்மிடம் இருக்கின்றன. நம்முடைய வேலை தொண்டு செய்வதே தவிர ஜெயத்தை எதிர்ப் பார்ப்பதல்ல உண்மையான காரியத்திற்காக உழைக்கும் ஒருவன் ஜெயத்தை எதிர்ப்பார்க்க வேண்டிய அவசியமில்லை.

இறுதியாகத் தொண்டு செய்வதில் மிகக் குறைந்த தன்மையையுடைய என்னை இப்பணியையாற்றும்படி கட்டளையிட்டு வரவேற்புக் கழகத்தினர்க்கு மறுமுறையும் என்னுடைய வந்தனத்தைக் கூறி, ஒப்பு உயர்வற்ற நம் தலைவர்கட்கு வாழ்த்துக் கூறி சுயமரியாதை இயக்கம் இந்நாட்டில் என்றென்றைக்கும் விளங்கி தன் ஒளியை வீசட்டும்! கொடியும் பறக்கட்டும் என்ற வாக்கியத்தையும் கூறி இக்கொடியை உயர்த்துகின்றேன்.

———

வரவேற்புப் பிரசங்கம்

பட்டுக்கோட்டையில் 1929ம் ஆண்டு மே மாதம் 25, 26 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கூடிய தமிழ் மாகாண சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர் திரு. ப. சு. தண்டபாணி அவர்கள் செய்த வரவேற்புப் பிரசங்கம் வருமாறு:—

ப. சு. தண்டபாணி

சகோதரிகளே! சகோதரர்களே!!

தமிழ் மாகாண முதலாவது சுயமரியாதைத் தொண்டர்களின் மகாநாட்டிற்கு விஜயம் செய்துள்ள உங்களனைவருடைய வரவும் நல்வரவாகுக. இயற்கையாகவே பலவளங்களும் நிறைந்த தஞ்சை ஜில்லா பொது விஷயங்களில் முக்கியஸ்தானம் வகிக்கும் பெருமையுடையது. அத்தகைய பெருமை வாய்ந்த ஜில்லாவைச் சேர்ந்ததும் சுயமரியாதை இயக்கத்தில் அதிகப் பற்றுள்ளவர்கள் நிறைந்ததுமான இப்பட்டுக்கோட்டை மாநகரில் நமது தொண்டர்களின் மகாநாடு கூடுவது மிக விசேஷமே. இம் மகாநாட்டிற்காக உங்களுடைய பல வேலைகளுக்குமிடையே தேக சிரமத்தையும், பொருள்செலவையும் கவனியாது இங்கு வந்து மகாநாட்டின் நடவடிக்கைகளில் கலந்துகொண்டுள்ள உங்கள் யாவரையும் வரவேற்புக் கழகத்தாரின் சார்பாக வரவேற்பதில் நான் பெருமை கொள்கிறேன்.

இந்த மகாநாட்டிற்குத் தன்னலமற்ற தொண்டர்கள் ஏராளமாக வந்து குழுமியிருப்பதைக்காண என் மனம் பூரிக்கின்றது. இது நமது தொண்டர்களுக்குத்தோன்றியுள்ள சுயமரியாதை உணர்ச்சியின் வேகத்தை இனிது விளக்கிக் காட்டுவதாகும். தொண்டர்களுக்குப் பல வகையிலும் ஆதரவளிக்கக் கடமைப்பட்டுள்ள பெரியார்களும் இங்கு திரண்டு கூடியிருப்பது மகிழ்ச்சியை விளைவிக்கத்தக்கதே!

நமது இயக்கம்

நமது சுயமரியாதை இயக்கத்தின்பால் ஆர்வமிகுந்த தொண்டர்களாகிய நாம் இம் மகாநாடு கூட்டியதன் நோக்கம் யாதென்பதை உணர்ந்து அதற்கான வகையில் தக்க முடிவுக்கு வரவேண்டியது அவசியமென்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இன்று நமது மனதை மிக வேகமாகப் பற்றியுள்ள சுயமரியாதை இயக்கத்தின் தத்துவம் மக்களால் எவ்வாறு உணரப்படுகிறதென்பதையும் நாம் கவனித்துப் பார்க்கவேண்டியது முக்கியம். நமது இயக்க உண்மைகளை நாடெங்கும் நாம் பிரசாரம் செய்து வந்தாலுங்கூட அதைச் சரிவர உணர்ந்திருப்பவர்கள் மிகச் சிலரே என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். நமது கொள்கைகளைக் குடியரசு, திராவிடன் போன்ற நமது பத்திரிகைகள் கார்காலத்து மழையைப்போன்று எங்கும் பொழிந்துகொண்டிருக்கும் நிலைமையிலும் அவை யாவராலும் சரிவர உணரப்படாதது ஒரு குறைவேயாகும். நமது இயக்கத்தைச் சேர்ந்துள்ள பலருக்கும் மன உணர்ச்சி எவ்வாறு இருக்கிறதென்பதை யோசித்துப் பாருங்கள். எல்லாத் துறையிலும் நமது இயக்கம் கொண்டுள்ள அபிப்பிராயங்களை நாம் யாவரும் கைக்கொண்டு அவ்வழி நடந்தாலல்லது என்ன பயனுண்டு? நமக்கு எதிர்ப்பாக இருப்பவர்கள் கூறுவது ஒருபுறமிருக்கட்டும்; நாம் யாவரும் நமது கோட்பாடுகளைச் சரிவர உணர்ந்து அதன் பயனையடைய முயலுவதில் குறையிருக்குமானால் அதுநமக்குப் பலவீனமாகாதா? நமது இயக்கத்தை ஆதரிப்போரில் நிவர்த்தியில்லாத நிலையிலும் சந்தர்ப்பத்திற்காகவும் வந்து கூடினோர் நீங்கலாக ஏனையோராவது அப்பலவீனத்தை உணருதல் மிகமிக அவசியமல்லவா? என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

சுயமரியாதை என்பதன் முக்கிய முடிவு தன்மதிப்பைக்காப்பாற்றிக் கொள்வது என்பதைத் தவிர, வேறெதுவுமாக இருக்கமுடியாதென்பதை எவரும் மறக்க முடியாதென்றே நினைக்கின்றேன். தன் மதிப்புக்கு இடையூறாக உள்ள எதையும் நாம் களைந்தெறிய வேண்டும் என்பதே அதனால் விளையவேண்டிய பயனாகும். ஆனால், மனிதக்கூட்டத்தின் வாழ்க்கை நிலையில் அதிலும் இந்துக்கள் என்போராகிய நமது தேசமக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையில் உள்ள ஜீவியத்தின் நோக்கும் என்? அதற்குப்பின்பும் ஏற்படும் போக்கும்-இருக்கப்பட்ட நிலைமையில், நமது தன்மதிப்பு எவ்வாறு காப்பாற்றப்படுகிறதென்பதை சாவகாசமாக யோசித்துப் பார்த்தால் நாம்வெட்கத்தால் தலைகுனியவோ அல்லது துக்கத்தால் மடியவோ செய்வதைத் தவிர வேறு வழியில்லை. சீர்திருத்தமெய்தியதும், நாகரிகம் படைத்ததுமான பல தேசங்களிலும் தன்மதிப்பு என்ற சுயமரியாதை உணர்ச்சியை அடிப்படையாகக்கொண்டுபலவகையான முறைகளில் பலவகையான பெயர்களைக் கொண்டு பலவகையான போராட்டங்கள் நடந்துகொண்டிருப்பதை நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். என்றாலும் நமது நாட்டிலுள்ள அளவு எல்லாத்துறையிலும் சுயமரியாதை உணர்ச்சி மழுங்கியுள்ள நிலைமையில் இவர்கள் இல்லை. நாம் எதையோசித்தாலும், எதைச்செய்தாலும், அவை அனைத்திலும் சுயமரியாதை உணர்ச்சிக்குப் பங்கம் இருந்து கொண்டேயிருக்கிறது. அத்தகைய முறையில் நமதுவாழ்க்கையின் நீதி என்றும் மாறாதபடி நிர்ணயிக்கப்பட்டுவிட்டதாகக்கருதி அஞ்சுவதே அதற்குக்காரணமாகும். அச்சமுள்ள விடத்தே அடிமைப் புத்தி உதயமாகிவிடுகின்றது. அங்கு தான் அடிமை வாழ்க்கை என்றும் மாறாத வகையில் நிலைத்துவிடுதில் என்ன ஆச்சரியமிருக்கிறது?

உயிருள்ள ஜன்மம் எடுத்த எவரும் உலக இன்பத்தை விரும்புவது இயற்கை. அவ்வின்ப வாழ்க்கைக்கு ஊறாக உள்ளது எது? அது சுயமரியாதை உணர்ச்சிக்குப்பங்கம் விளைவிக்கக்கூடியவைகளுக்கு ஆதாரமான நடைமுறையேயாகும். சுயமரியாதை உணர்ச்சிக்குப்பங்கம் நேரிடக்கூடியது எதுவானாலும் அது உயர்வு தாழ்வு என்பதைப் பொறுத்ததேயாகும். நியாயமாக யோசித்து முடிவுக்குவந்தால் இம்முறை ஒருவனை வீழ்த்தி ஒருவர் நலம் பெறுவதற்காக ஏற்பட்டதுதான் அத்தகைய முறை எதுவானாலும் அது எந்தத்துறையில் எழுந்ததானாலும் அதை அடியுடன் களைந்தெறிய வேண்டியதே சுயமரியாதைப் பிரியர்கள் செய்யவேண்டிய கடமை. முற்போக்கடைந்த தேசங்களில்கூட உயர்வு தாழ்வு என்னும் பீடையின் சேஷம் பொருளாதாரத் துறையில் ஒப்புக்கொண்டிருக்கின்றது. ஆனால், இந்திய தேசத்திலுள்ள இந்துக்களாகிய நாமோ, அடிமை வாழ்வில் அமிழ்ந்து அதில் ஆனந்தமும் கொண்டு அருளைப்பற்றியும் அதனால் பின்னாலடைவதாகச் சொல்லப்படும் பொருளைப்பற்றியும் பேசிக் காலங்கழிக்கின்றோம் வெகுகாலமாகவே நாம் அரசியலில் தன்மதிப்பற்றவர்களாக சுதந்திர மிழந்திருக்கின்றோம். மதத்திலும் அறிவுக்கு வேலை கொடுக்காத அடிமைகளாயிருக்கின்றோம். சமூக வாழ்க்கையிலோ மனிதருக்குள்ள மரியாதைகூட அற்றவர்களாய் தன்மதிப்பிழந்திருக்கின்றோம். பொருளியல் துறையிலும் சொல்லத் தேவையில்லை. உயிரிருந்தும் உயிரற்ற பிணங்கள் போன்று இருக்கவேண்டிய நிலைமை நம் நாட்டிலிருக்கிறது. இன்னும் நமக்கு தன்மதிப்பு என்கிற சுயமரியாதை முற்றிலும் இல்லாமலிருக்கிறதென்பதற்கு வேறு என்ன சாக்ஷியங்கள் வேண்டும்?

'அரசியலில் சுதந்திரம் வேண்டும், நமது நாட்டின் விடுதலையை முதலில் தேடிக் கொள்ளவேண்டும் என்ற கூக்குரலுக்குமட்டும் நம் நாட்டில் பஞ்சமில்லை. ஆனால், அரசியல் சுதந்திரம் கைகூடாமலிருப்பதற்கும், நாட்டு மக்கள் ஒன்றுபட்ட மனமெய்தாதிருப்பதற்கும் அடிப்படையாகவுள்ள காரணங்கள் என்ன என்பதை கூக்குரலிடுவோர் தெரிந்திருந்தும் தெரியாதவர்கள்போல் நடிக்கின்றனர். தேசிய சுதந்திரம் என்றும், பரிபூரண சுயேச்சை என்றும், வானமிடியக் கூவும் தேசிய வீரர்கள், நமது நாட்டிலேயே குருட்டு வைதிக நம்பிக்கையினாலும், பார்ப்பனியக் கொடுமையின் ஆதிக்கத்தினாலும் ஏற்பட்டு நமது சமூகத்தையே பாழ்படுத்திவரும் வருணபேதத்தையும், அதன் உயர்வு தாழ்வுக் கொள்கைகளால் ஏற்பட்ட, ஏற்படுகின்ற வகுப்புப் பிளவுகளையும், அதனால் விளைந்துவரும் தேசிய பலவீனத்தையும் புறக்கணித்து விடுகின்றனர். அதுமட்டுமல்லாமல் சமூகச் சீர்திருத்தத்தில் எண்ணங்கொண்டிருக்கும் அறிஞர்களும் கட்டாயமாக நாம் நம்பித்தான் ஆகவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ள மதப்புரட்டில் சிக்கித் தவிப்பதுடன் கடவுள் பெயரைச் சொல்லி பரிசுத்தர்களாகிவிடவும் பார்க்கிறார்கள். பகுத்தறிவுள்ள—பகுத்தறிவிருந்து அதன் வழி நடக்கின்ற-ஒரு சிலர் மதப்புரட்டினாலும் அதற்காதாரமான வேத சாஸ்திர புரட்டினாலும் ஜனசமூகத்திற்கு ஏற்படும் கொடுமைகளை எடுத்துக்கூறினால் அவர்களை இம்மதப் பித்தர்கள் நாஸ்திகர்கள் என்றும், நிரீஸ்வரவாதிகள் என்றும் கூறித்தூற்றுகின்றனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக பொருளாதார நிலையின் தற்கால அமைப்பினால் மனித சமூகத்தில் பெரும் பகுதி மக்கள் படும் கஷ்ட நஷ்டங்கள் ஒரு பொருட்டாக எண்ணப்படாமலும் இருக்கிறது. மனித உரிமை பணக்காரர்களுக்கோ அல்லது அவர்களை அண்டித் திரியும் தன்மதிப்பற்ற சில படித்தவர்களுக்கோ மட்டுமே கிடைக்கக் கூடியதாயிருக்கிறது. ஏழை மக்களின் உழைப்பு, பணம் படைத்தவரின் பையை நிறப்புகின்றதென்ற உண்மையை எவரும் உணருவது கிடையாது. இவ்வழியில் நடக்கும் கொடுமைகளும் சொலத்தரமல்ல. இதைப்பற்றி எவரும் பேசவந்தால் எதேச்சாதிகாரம் அவர்களை ஒடுக்கி அடக்கிவிடுகின்றது. இதை மிகத் தீவிரமான அரசியல் வாதியும், சமூகச் சீர்திருத்தக்காரரும் மதப் புரட்டுகளை வெளியாக்குவோரும் புறக்கணித்தே போகிறார்கள். சிலர் அதை கவனிக்க மனமிருந்தும் காலநிலையைக் கருதி வாளாவிருக்கின்றனர். இந்த நிலைமையில் இருக்கிறது தற்போதைய மனித வாழ்வு. இவ்வாறு பலவாறான துறைகளிலும்—அதாவது அரசியல், சமூகவியல், மதவியல், பொருளியல் போன்ற பலதுறைகளிலும் மனிதக் கூட்டத்திற்கு சுயமரியாதைக் குறைவு ஏற்பட்டிருப்பது கண்கூடு. அவை யாவற்றையும் நிவர்த்திக்கப் பாடுபடவேண்டியதுதான் சுயமரியாதைத் தொண்டர்களாகிய நமது தவறக் கூடாத கடமையாகும் இவ்வழியில் நாம்செய்யவேண்டிய வேலைகளுக்கு பழைய நிலைமைகளும், அதற்கு ஏற்பட்டு நிலைத்திருக்கும் பலமான ஆதிக்கமும் பலவகையிலும் நமக்கு சங்கடத்தையே விளைவிக்கும் எனினும், முள் வேலியாயிருப்பினும் தாண்டிச்சென்று பணமிருந்தால்எடுத்து அனுபவிக்க விரும்பும் இயற்கை சுபாவத்தைப்போல வழியிலுள்ள இன்னல்களைக் கடந்து செல்ல நாம் தைரியமுள்ளவர்களாக இருக்கவேண்டும். அத்தகைய நமது முயற்சியில் நாம் கைப்பிடிக்க வேண்டிய வழி புதிய மாறுதலைத் தவிர வேறு எதுவுமாகவிருக்கமுடியாது. எத்துறையில் வேலை செய்து நலம்பெறவேண்டியதாயினும் பழையஏற்பாடுகளை எல்லாம் புரட்டித் தள்ளும் புதிய மாறுதலைக் கைக்கொள்ளுவதால்தான் முடியும். உலக சரித்திரத்தில் இதற்கு ஏராளமான சான்றுகள் கிடைக்கும். இம்முக்கிய நுட்பங்களை எல்லாம் நம் மியக்கத்தினர் யாவரும் சரிவரஉணர்ந்து கொண்டிருப்பார்களா? என்பதைத் தான் நாம் கவனிக்கவேண்டும். ஆதலின் நம தியக்கக் கொள்கைகளை நாம் இன்னும் பலமாய்ப் பிரசாரம் செய்து நம்மவர்கள் யாரும் சுயமரியாதைத் தத்துவங்களைச் சரிவர உணர்ந்து அதன் படி நடக்க வழி செய்யவேண்டும். மேலும் நமது சுயமரியாதை இயக்கம் தோன்றி சொற்பகாலமே யாயிற்று. என்றாலும் இதற்கு முன்னும் இத்தகைய எண்ணங்கள் தோன்றித்தான் இருக்கிறது. வருணபேதம் நிலைக்க ஆரம்பித்த காலமுதலே வடநாட்டில் புத்தர்களாலும், தென்னாட்டில் சித்தர்களாலும் அது எதிர்க்கப் பட்டு வந்திருக்கிறது. அக்காலத்து அரசியல் ஆதிக்கம் சீர்திருத்தக்காரர்களுக்கு விரோதமாக இருந்தமையால் அவர்கள் முயற்சி பயன்படவில்லை. ஆனால், இக்கால நிலைவேறு. இப்பொழுது நம்மினின்றும் மாறுபட்ட நம்பிக்கை உடையோர்களின் வசம் அரசியல் ஆதிக்கம் இருப்பதால், கொடுமைப்படுத்தப்பட்ட மக்கள் எல்லாம் வருணபேதக் கொடுமையை உணர்ந்து விழித்துக்கொண்டமையாலும், இனி இத்தகைய உணர்ச்சியை அடக்கிவிட முடியாது. படமெடுத்த பாம்பை அடித்தால் அதிகச் சீற்றம் ஏற்படுவதுபோன்று உள் உணர்வினின்றும் கொதித்துக் கிளம்பியுள்ள இவ்வுணர்ச்சி அதிகமாக எதிர்ப்புகள் ஏற்படினும் அடங்காது மேற்கிளம்பிக் கொண்டே இருக்கும்.

எதிர்ப்புகள்

நமது இயக்கத் தலைவர் திரு. ஈ. வெ. ராமசாமிப் பெரியாரின் தன்னலமற்ற உழைப்பின் பயனால், நமதியக்கம் நாட்டு மக்களின் மனதை அதிகமாகப் பற்றிக்கொண்டுவிட்டதுடன் அவரது இலக்ஷியங்களைப் பின்பற்றி நடப்போரும் அதிகமாகிவிட்டனர். உலகில் தோன்றிய சீர்திருத்தக்காரர்கள் எவரும் தம் வாழ்நாளிலேயே தமது இலக்ஷியங்களை ஜனசமூகம் ஒப்புக்கொண்டு பின்பற்றப் பாக்கியம் பெற்றது கிடையாது. அத்தனிப் பெருமையை அடைந்தவரில் நமது தலைவர் திரு. ராமசாமியாரே முதன்மையான வராதயிருக்கிறார். அப்பெரியாரது இடைவிடாத உழைப்பினால் ஏற்பட்ட உணர்ச்சியின் மிகுதியினால் நமது மாகாண சுயமரியாதை முதலாவது மகாநாடு சீரும் சிறப்புமுடன் செங்கற்பட்டில் நடந்து அதில் பல முற்போக்கான தீர்மானங்களும் செய்யப்பட்டன. அதைக்கண்டதும் சிலருக்கு அழுக்காறும், சிலருக்கு அடிவயிற்றில் பயமும் ஏற்பட்டு அதனால் நமதியக்கத்திற்கு விரோதமாக எதிர்ப்புகளும் தோன்றியிருக்கின்றன. சமீபித்துவரும் பொதுத் தேர்தலும் அவ்வெதிர்ப்புகள் பலப்படுவதற்கு ஒரு காரணமாகும். சமூக ஊழல்களையும், சமயப் புரட்டுகளையும் வெட்ட வெளிச்சமாக்கும் நமது இயக்கத்தைக்கண்டு மருட்சியடைந்த சில சுயநல பண்டிதர்களும் வயிற்றுப்பிழைப்புக் கூலிகளும் நமது இயக்கத்தை மக்கள் தவறாக உணருமாறு விஷமப் பிரசாரம் செய்கிறார்கள். அரசியலில் தலைகாட்ட முடியாது காற்றுதைந்து வந்த தேசியப்புரட்டர்கள் வரப்போகும் தேர்தலைக் கருதி ஜனக்கூட்டத்தின் மனதை நமக்கு விரோதமாக மாற்றிவிட்டுப் பயனடையலாம் என்பதற்காக இத்தன்னலப்புலிகளைக் கங்கணம்கட்டிவிட்டுவிட்டனர். இதனால் ஏற்பட்ட பலம் காரணமாக இம் முதுகெலும்பற்றவர்களெல்லாம் கூடிக்கொண்டு நமது புனித இயக்கத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்வதற்காக ஆஸ்திக சங்கம் என்ற பெயரால் ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொண்டு அட்டகாசமும் செய்துவருகிறார்கள். பழைய கட்டுப் பெட்டிகளாக விளங்கும் இப் பண்டிதக் கூட்டமும் அவர்களது கூலிகளாகிய வரல்களும் பகுத்தறிவை அடகு வைத்தவர்கள் போல நமது இயக்கக் கொள்கைகளைத் தாறுமாறாக மாற்றிக் கூறி மக்கள் மனதைக் கலக்கின்றார்கள். மதத்தின் பெயரால் வயிறு பிழைக்கும் பார்ப்பனக் கூட்டத்திற்கும், அதை ஆதாரமாகக் கொண்ட சாஸ்திர குப்பைகளைக் கிளறி அதன் மூலம் ஜீவனத்திற்கு வகை ஏற்படுத்திக் கொள்ளும் பண்டிதக் கூட்டத்திற்கும் நமது சமத்துவக் கொள்கைகளும், விசாலமான நோக்கமும் முரண்பாடாக இருக்கக் கூடியது இயல்பே. அவர்களுடன் கொள்கை எதுவுமற்ற கூலிகளின் ஆர்ப்பாட்டமும் அதை ஏற்பாடு செய்து கொடுக்கும் அரசியல் புரட்டர்களின் பண பலமும் ஒன்று கூடிக்கொண்டால் சொல்லவும் வேண்டுமோ? எதுவும் சொல்வதும் ஏமாற்றம் செய்வதும் அவர்களது தினசரித் தொழிலாகி விடுகின்றது. ஆஸ்திகமென்ற பெயர் சொல்லி இவர்கள் கடவுளுக்கு வக்காலத்து வாங்குவதுடன் நம்மை நாஸ்திகர்கள் என்றும் நிரீஸ்வரவாதிகள் என்றும் கூறி நிந்திக்கிறார்கள். நாம் கடவுளை இல்லை என்று சொல்லுகின்றோமென்றும் நம்மால் உலகமே கெட்டுப்போய் விடுமென்றும் கூறி மக்களைப் பயமுறுத்துகின்றனர். நாம் மதத்தை அழிக்கப் பார்க்கிறோம் என்றும் ஜாதிக்கட்டைத் தகர்க்கமுயலுகிறோமென்றும் சாற்றுகின்றனர். நாட்டைக் கெடுத்தபாழும் வருணாசிரம தருமத்தினால்தான் உலகம் வாழும் என்று வீரம் பேசுகின்றார்கள். நாம் சாஸ்திரத்தைக் குற்றம் கூறுகிறோம், சமயக் குரவர்களைத் தூற்றுகின்றோம் என்றும் குற்றம் சாட்டுகின்றார்கள். இராமாயணம் போன்ற மதநூல் என்று சொல்லப்பட்டவைகளையும் இராமர் சீதை போன்ற ஆண் பெண் தெய்வ அவதாரங்கள் என்று சொல்லப்பட்டவர்களையும் நாம் குறை கூறுகின்றோமென்றும் நம்மை இன்னும் விட்டுக்கொண்டிருப்பது தர்மமாகுமாவென்றும் சொல்லி நம்மீது ஜனங்களை தவறாக ஏவிவிடப் பார்க்கின்றனர். புதைக்கப்படுவதற்காகக் குழியின் மேலே வெகு வேகமாகச்சென்று கொண்டிருக்கும் பார்ப்பனியத்திற்கும் இவர்கள் பரிந்துப்பேசுகிறார்கள். இவ்வளவும் கூறிவிட்டு தேர்தல்களில் சுயமரியாதையாளர்களுக்கும், ஜஸ்டிஸ்கட்சியினர்களும் வாக்களியாதீர்களென்றும் சொல்லுகிறார்கள். இவர்களின்நோக்கம் எதுவாயிருப்பினும் மக்கள் இம்மாய்மாலக்காரர்களின் வார்த்தையில் மயங்கி

விடாதபடி நாம் எச்சரிக்கையாக விருக்க வேண்டியது அவசியம்.

ஆஸ்திகப் புரட்டு

இவ்வாஸ்திகப் புரட்டர்கள் நம்மை எதிர்த்துப் பேசும் வார்த்தைகளில் சில நாம் கூறாத ஒன்றைக் கூறியதாக சொல்லுவதாயிருப்பதோடு மற்றவைகள் வீண் புரட்டாகவும் வெளிவேஷமாகவும்விவாசுயுத்தியற்றதன்மையாகவு மிருக்கிறது. ஆஸ்திகர்கள் என்று கூறிக்கொள்ளும் இவர்கள் கூற்றுப்படியே இவர்கள் ஆஸ்திகர்களாவென்று பார்த்தால் அதுவும் கிடையாது. ஆஸ்திகர்களென்றால் கடவுளைப்பற்றிய நம்பிக்கை உள்ளவர் என்றுதான் பொருள். அதன்படி இவ்வாஸ்திகர்களெல்லாம் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் தானா? அப்படியானால் அவர்களின் கடவுள் எது? இந்த ஆஸ்திகத் தர்மிகளுக்கு அவர்கள் ஜீவனத்திற்கு உதவும் பணந்தான் கடவுளே யல்லாமல் வேறெதுவுமல்ல. அந்தக்கடவுளிடத்துத்தான் நம்பிக்கை கொண்டு வேலை செய்கிறார்களேயல்லாமல் உண்மைக் கடவுள்மீது அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. எல்லோருடைய நன்மையையும் ஒன்றாகக் கருதக்கூடிய உத்தம ஞானிகள் கடவுளைப்பற்றி கொண்டிருந்த, கொண்டுள்ள எண்ணம் வேறு; இவர்கள் எண்ணத்தின் போக்கு வேறு; இவர்கள் கல்லுக் கடவுளுக்குத்தலைவணங்கச் சொல்லுகிறார்கள்; காசு பறிக்கும் [illegible]கர்களுக்கு அடிபணியச் சொல்லுகிறார்கள். கடவுளைக் கல்லாகவைத்துக் கும்பிடுவதிலும் காசு கொடுத்து என் கும்பிடவேண்டுமென்றால் அது சநாதன தர்மத்தின் கட்டளை என்பார்கள். சாஸ்திரத்திலுள்ளசங்கதிஎன்றுகூறுவார்கள். உங்கள் சாஸ்திரம் உண்மை அறிவிற்கு ஒத்து வரவில்லையே என்றால் நீ நாஸ்திகன்கடவுள் இல்லை என்று கூறுகிறாய் என்று சொல்லிவிடுவார்கள். உண்மையிலேயே இவர்கள் போன்ற சமயவெறியர்களின் கடவுள் நம்பிக்கை இந்த அளவுக்குத்தானிருக்கிறது. உணர்ந்து தெளிந்த அறிஞர்கள் கொண்டுள்ள கடவுள் நம்பிக்கையின் தன்மை இதுவாகாது. இவ்வளவு சிக்கலாகவிருக்கும் இவ்விஷயத்திற்கு ஆதாரமாகிய கடவுள் என்பது என்ன? அதன் தன்மை என்னவென்பதையும் கவனிப்போம்.

கடவுள் என்ற பதமே கடந்தது; எல்லையற்றது; அளவிட்டுக் கூறமுடியாதது என்பதாக அர்த்தம் கொள்ளக் கூடியதாயிருக்கின்றது. இத்தன்மையைக் குறிப்பு எல்லைக்குள் அளவிட்டுக்கூறி கோயிலும் கட்டி, கும்பிடவும் சொன்னால் அது எவ்வளவு அர்த்தமற்றது என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். அக்கும்பிடும் செயலுடன்கூட குருக்களுக்குக் கூலியும் கொடு என்றால் இவர்கள் கொண்ட கோட்பாடுகளின் நோக்கம் ஒரு கூட்டத்தாருக்குக் கிடைக்கக்கூடிய கொள்ளைக்கு வழியாகுவதைத் தவிர வேறென்ன இருக்கமுடியும்? இயற்கையாகவே கடவுள் என்பது அறிவிற்கு எட்டாததா யிருக்கின்றது; ஆலோசனைக்கும் புலப்படாததாயிருக்கின்றது; ஆராய்ச்சியினாலும் தெரிந்துகொள்ள முடியாமலுமிருக்கிறது; அதை அனுபவத்திலும் உணருவது அசாத்தியமே. இவ்வெல்லையற்ற சங்கதியை யோசித்து யோசித்து ஒரு முடிவுக்கும் வரமுடியாமல்பல அறிஞர்கள்உயிர் துறந்தும் போய்விட்டனர். இவ்வெட்டாத வேலையில் நாம் ஈடுபடுவதில் என்னபயன்? இதில் செலவிடும்நேரத்தையும்இதற்காக விரயப்படுத்தப்படும் பொருளையும் நாம் கண்ணுக்கெதிரே காணும் மனிதக்கடவுளுக்கு உபயோகிக்கலாகாதா? அறிவுடைய உலகமானால் இதை ஆராயத் தலைப்படும். ஆனால்,அறிவிற்குத்தாவிடப்பட்ட நிலையில் உலக மாந்தர் இருப்பதனால் யோசித்துப்பார்க்க மனம் ஏற்படுவதில்லை. கடவுளைப்பற்றி ஆயுள் முழுதும் ஆராய்ச்சி செய்து மடிந்த ஒரு பிரசித்திபெற்ற ஆங்கில அறிஞர் ஒருவர் கடவுள் தன்மையைத்தான் கண்டு கொள்ள முடியாமல் போய்விட்டது என்று நேர்மையாக ஒப்புக்கொண்டிருப்பதுடன், கடவுள் நம்பிக்கை என்று ஒன்றைக் கொள்ள வேண்டுமானால் அது ஒரு மனிதன் பிறமனிதனொருவனுடையமனவுணர்ச்சியைத் துன்பப்படுத்தாமல் இருப்பது தான் என்பதாகத் தன் ஆராய்ச்சி முடிவினின்றும் கூறியுள்ளார். மற்றும் பல அறிஞர்கள் கடவுளைப்பற்றி பலபல விதமாக அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். உலகத்தை மற்று முள்ள அனைத்தையும் இயக்குவிக்கும்சக்திதான் கடவுள் என்று சிலர் முடிவுகட்டியுள்ளார்கள்; சிலர் இன்ப நிலையே கடவுள் என்கிறார்கள்; சிலர் அறிவே கடவுள் என்கிறார்கள்; ஆனந்தமே கடவுள் நிலையென்று சிலர் கூறுகிறார்கள்: சிலர் அன்பே கடவுள் என்கிறார்கள்; சிலர் ஆத்மாவே கடவுள் என்பதாகச் சொல்லுகிறார்கள்; சிலர் யாவுக்கும் எட்டாத [illegible] இருக்கிறது. அதுவே கடவுள் என்று சொல்லுகின்றார்கள். இவ்விதமாகப் பலரும் பலவிதமாகக் கடவுளைப்பற்றிக் கூறியுள்ளார்களேயன்றி பலர் நினைக்கின்றபடி கடவுட்டன்மை கல்லுக்குள்ளும்,அதனாலுண்டாகும் பயன்காசுக்குள்ளும் இருப்பதாக அறிஞர்கள் கூட்டம் ஒப்புக்கொண்டதில்லை. மதங்களெல்லாம் மனித வாழ்க்கையின் ஒழுங்குக்காக ஏற்பட்ட சில சாதனங்களேயாகும். ஆனால்,அவற்றின்நடைமுறைகள் நம்பிக்கையின்பேரில் நடத்தத் திட்டப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கைக்கு ஆதாரமாகவே கடவுளையும் கருதவேண்டியிருக்கிறது. மேலும் மனிதவாழ்வின் சித்திகளுக்காக மக்களுக்கு கடவுள் எண்ணம் ஒரு பற்றுக்கோடாயிருக்கும் என்பது உண்மையறிஞர்களின் துணிவு. அத்தகைய உத்தம எண்ணத்தை அடிப்படையாகக்கொண்டு வாழ்க்கை நடத்துதல் ஒழுக்க மிகுதிக்குச் சாதகமாயிருக்கும் என்று கருதப்பட்டது. ஆனால், துரதிர்ஷ்ட வசமாக இம்மாதிரியான நன்னோக்கங்கள் ஈடேறாதவாறு கடவுள் நம்பிக்கையில் பூசாரித்தனம் புகுந்து கொண்டு கடவுளின் உண்மையை மறைத்து விட்டதோடு அதன் தன்மையையும் அடியோடு மாற்றிவிட்டது. இக்காலம் கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் இருக்கக்கூடிய மாதிரி மிக்கேவலத்தினும் கேவலம்! கடவுள் இல்லங்களென்று கருதப்படும் நமது ஆலயங்களெல்லாம் விபசாரவிடுதிக்குச் சமானமாயிருக்கிறது என்பதாக சமூக—மதச் சீர்திருத்தத்தில் மிதமான எண்ணம் படைத்த திரு. காந்தியே கூறியிருக்கிறார் என்றால் நாம் அதிகம் சொல்வானேன்! கோயில் வழிபாட்டின் தன்மை கடவுள் நம்பிக்கையை உண்டுபண்ணுவதற்கு மாறாக கடவுள் நம்பிக்கையையே கெடுத்துவிடுகின்றது. அத்துடனுமில்லாமல் அதன் பெயரால் அக்கிரமமான செயல்களும், அதிகப்படியான செலவுகளும் ஏற்படச் செய்கின்றன. என்னதான்கொடியபாவத்தைச் செய்தாலும், ஆலயக்கடவுளுக்கு ஏதோ சில அபிஷேக முதலியவைகளும், வேறு சில உபயங்களும் செய்துவிட்டு, குருக்களுக்கும் பூசாரிகளுக்கும் எதுவும் தக்ஷிணை கொடுத்துவிட்டால் தாம் செய்த பாவங்களெல்லாம் நிவர்த்தியாகி விடுவதாக நம்மக்கள் நம்பி, அதன்படி நடந்தும் வருகின்றனர். இதன் மூலம் கடவுளை இவர்கள் ஏமாற்றிக் கைலஞ்சம் கொடுத்து மன்னிப்படைவது போல நடந்துகொள்வதாக ஏற்படவில்லையா? இப்படியிருக்கக்கப்பட்டவர்களுக்குக்கடவுள் நம்பிக்கை யிருக்கிறதென்று ஒப்புக்கொள்ள முடியுமா? உலக நன்மையை உத்தேசித்த கடவுள் நம்பிக்கையில் நமக்கு உறுதியான எண்ணம் உண்டு. அத்தகைய கடவுளை நாம் இல்லை என்று கூறவில்லை. ஆனால், வேதசாஸ்திரப் புரட்டுகளால் உலகை மயக்குபவர்கள் கொண்டுள்ள கடவுள் நம்பிக்கையையே நாம்வெறுக்கின்றோம். அவர்கள் நடத்தையில் காட்டுகிறபடி நம்பக்கூடிய கடவுள் ஒன்றிருந்தால் அது உலக நன்மைக்குமாறாக கெடுதிக்கே ஆதாரமானதாயிருப்பதால் அதையே நாம் தேவையில்லை என்கிறோம். எங்கும் நிறைந்த சக்தியாகிய கடவுளை இன்பமாகிய கடவுளை, அன்பாகிய கடவுளை, அறிவாகிய கடவுளை, ஆத்மாவாகிய கடவுளை, இயற்கையாகிய கடவுளை, நாம் எவரையும்விட அதிகமாக மதித்து நம்பிக்கைகொள்ளுகிறோம். அத்தகைய கடவுளின் உண்மைத்தன்மைக்கொப்ப நடக்கவேண்டும் என்றும் விரும்புகின்றோம். ஆனால், நமக்கு இப்பொழுது சமயப்பூசாரிகள் கூறும் கடவுள்—அவர்கள் கூறியபடி யெல்லாம் நம்பிநாம் நாட்டம் வைத்துள்ள கடவுள், எல்லைக் கள்ளடங்கியதாய், துன்பத்திற்குரியதாய், அன்புமுறைக்கு விரோதமானதாய், அறிவுக்கு முரண்பட்டதாய், ஆத்ம உணர்ச்சிக்குப் பங்கம் விளைவிப்பதாய், இயற்கைத் தன்மைக்கு மாறான தாய்க் காணப்படுவதால் அதை நாம் ஒழித்துவிட ஆசைப்படுகின்றோம். இதற்காக நம்மை நாஸ்திகர்கள் என்று கூறும் ஆஸ்திகர்கள், கடவுள் பெயரால் ஏமாற்றிப் பிழைப்பவர்களாகவும் கடவுள் நம்பிக்கையைஉண்மையாக உணர்ந்து அதன்வழி நடக்காதவர்களாகவுமிருக்கின்றனர். இவர்களை எவ்வாறு ஆஸ்திகர்கள் என்று கூறுவது? ஒத்த அறிவும், ஒத்தபண்பும் உடைய எல்லா உயிர்களுக்கும் கடவுள் மூலகாரணராகக் கொள்ளப்பட்டால், தீண்டாமை, அணுகாமை, பார்க்காமை முதலிய அநாகரீக முறைகளும், பார்ப்பான் உயர்ந்த ஜாதி சூத்திரன் வேசி மகன் என்ற திட்டங்களும் ஏன் நம் நாட்டிலிருக்கின்றன? எல்லோரிடத்தும் சமத்துவநீதி ஏன் வழங்கப்படுவதில்லை? அவை தவறெனில் அக்கொள்கைகளுக்கு வக்காலத்து வாங்கும் இந்த ஆஸ்திகர்,கடவுள் உண்மைக்கு மாறானவர்களாகிவிடமாட்டார்களா? இவர்களின் ஆஸ்திகப்பேச்சு ஒருகாதொடிந்த ஊசியளவாவது பயன் படக்கூடுமா? நம்மை நாஸ்திகர்கள்என்று கூறுகிறார்களே, அதன் உண்மை என்ன என்பதையும் பார்ப்போம்.

நாஸ்திகன் என்றால் வேத சாஸ்திர புராண இதிகாசங்களையும் ஸ்மிருதிகளையும் தர்க்கயுக்தியால் மறுப்பவன் நாஸ்திகன் என்று மனுதரும சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. அந்த முறையில் பார்த்தால் நாம் நாஸ்திகர்கள்தான் என்பதை தாராளமாக ஒப்புக்கொள்ளுகின்றோம். நாஸ்திகர்கள் என்றால் கடவுள் நம்பிக்கையற்றவர்கள் என்று கூறினால், நாம் உண்மைக்கடவுட்டன்மையிலும்—சமத்துவ ரீதியில் உலகஅமைப்புஇருக்கவேண்டியது தான் என்ற— அதன் உண்மையிலும் நாம் மிகுதியும் நம்பிக்கை கொண்டுள்ளவர்களாதலால்—நாம் நாஸ்திகர்களாகி விடமாட்டோம். ஆகவே, இப்போதைய நிலையில் அவர்களும் ஆஸ்திகர்களாகமாட்டார்கள் நாமும் நாஸ்திகர்களாகமாட்டோம். ஆதலால் நாஸ்திகர்கள் என்ற வெடி குண்டை அவர்கள் நம்மீது எறியும் பொழுது நாம் பயப்படத் தேவையில்லை. கடவுளைப்பற்றிய நமது உண்மைக் கருத்தை இன்னும் விளக்கமாகக் கூற வேண்டுமென்றால்— நாம் அது எது என்பதையறிய ஆசிக்கவில்லையென்றும், அதன் தன்மையை—தனியாக ஒன்றிருப்பதாக எண்ணாமல் ஜீவகோடிகளின்மூலம் நாம் பார்க்க விரும்புகின்றோம். அதாவது ஜீவர்கட்கு நன்மை செய்வதன் மூலம் கடவுள் நம்பிக்கைக்கு மாற்றமில்லாதவர்களாக இருக்க விரும்புகின்றோம்—என்றும் கூறிவிடுவோம். இவ்வாறுகளையெல்லாம் மக்கள் சரிவர உணர்ந்துக் கொள்ளாதிருப்பதனால் நம்மைப்பற்றி எதிரிகள் தவறாகக் கூறுவதை ஜனங்கள் எளிதில் நம்பிவிடக்கூடியதாயிருக்கின்றது இதை விளக்கி மக்களுக்கு உண்மை உணர்த்தவும், நாம் சரியானதும் பலமானதுமான பிரசாரம் செய்தாகவேண்டும்

எடுத்ததற்கெல்லாம் மதம் என்ற பெயராலும், சாதி என்ற பெயராலும் நாம் சுயமரியாதை இழந்தவர்களாயிருப்பதால், மதப்புரட்டுகளையும்சாதிப்புரட்டுகளையும்அழித்தொழிக்கவிரும்புகின்றோம் இன்றளவும் நமது நாடு பார்ப்பனீயக் கொடுமையினாலும் அதற்காதாரமான வருணாசிரம தருமக்கோட்பாட்டாலும், அவற்றை நிலைநிறுத்துவதற்கேற்பட்ட வேதசாஸ்திர புராண இதிகாசங்களாலும் பாழ்பட்டுக்கொண்டு வருவதால் நமது நாட்டின் விடுதலைக்கு இவையெல்லாம் அடியுடன் ஒழிக்கப்படவேண்டும் என்று கூறுகின்றோம். ஆராய்ச்சியினால் நிர்த்தாரணம் செய்யப்பட்ட இவ்வுண்மைகளை ஜனங்களுக்குத் தொடர்பான பிரசாரம் செய்வதன்மூலம் எடுத்துக்காட்டி விஷயமுணர்த்தவேண்டும் இவ்வாறு நமது கொள்கைகளை மக்கள் பிறழ உணராமலிருப்பதற்காகவும், சரிவர அறிந்துகொள்வதற்காகவும் நாம் கட்டுப்பாடான முறையில் ஒரு ஒழுங்குக்கு உட்பட்டுப் பிரசாரம் செய்தல் மிகமிக அவசியம். இன்றேல் நமது விரோதிகளின் வார்த்தையைக் கேட்பதால் நாம் சொல்வதன் உண்மை தெரியாமற் போய்விடும். இப்பொழுது நமக்கு விரோதமாகப் பிரசாரம் செய்யும் ஆஸ்திகர்களுடன் வருணாசிரமப் பார்ப்பனர்களும் நமக்கு விரோதமாக வேலை செய்கின்றனர். அவர்கள் பார்ப்பான் என்னதான் சாஸ்திரத்திற்கு விரோதமாகயிருப்பினும் அவன் பிறவியினால் உயர்ந்தவன்என்றும், ஏனையோர் யாவரும் தற்காலத்தில் சூத்திரர்களே என்றும் கூறுகின்றார்கள். இதை ஆஸ்திகம் பேசும் பண்டிதக் கூட்டம்கூட ஒத்துக்கொள்ளாது. சாதி தத்துவம் நம் நாட்டைப்பிடித்த பீடையாகும்; இதைக் குழி வெட்டிப் புதைத்தாலன்றி இந்துக்கள் என்போருக்கு கதிமோக்ஷமில்லை. வருணாசிரமதர்மிகள் தங்கள் பழைய கட்டுப்பாட்டை என்றென்றைக்கும் நிலைக்க வைக்கப்பார்க்கின்றனர். அதை நாம் தகர்த்தெறிய வேண்டும். இதுவும் தக்க பிரசாரமின்றி இலேசில் முடியாது.

வரப்போகும் தேர்தல்

திடீரென்று ஆஸ்திகர்கட்கும் வருணாசிரமக்காரர்களுக்கும் நாட்டைப்பற்றித் தோன்றியுள்ள கவலையின் இரகசியமெல்லாம் அடுத்துவரும் தேர்தலில்பார்ப்பனர்களும் பார்ப்பனக் கூலிகளும் வெற்றி பெறவேண்டு மென்பதுதான். தேர்தல் வருங்காலங்களிலெல்லாம் இப்பெரிய கவலை இவர்களுக்கு வந்துவிடுவது சகஜம். சென்ற தேர்தல்களில் மழைகூடஜஸ்டிஸ் கக்ஷியால்தான்பெய்யவில்லை என்று அவர்கள் கூறியதுபோல் இத்தேர்தலுக்காக,மதத்தின்பெயராலும் கடவுளின் பெயராலும் தேர்தல் பிரசாரம் செய்ய ஆரம்பித்திருக்கின்றார்கள். அரசியலதிகாரங்களை எல்லாம் கைப்பற்றிக்கொண்டு பார்ப்பனரல்லாதாரை என்றென்றைக்கும் அமிழ்த்தி வைக்கப் பார்ப்பன அரசியல் தந்திரிகள் பலவகையிலும் முயற்சிப்பார்கள். அரசியலில் பார்ப்பனர்களை ஏமாற்றித் திக்குமுக்காடச் செய்து வந்த நமது மாபெரும் தலைவர் உயர் திரு. பானகலரசர் நமது துர்ப்பாக்கியத்தின் காரணமாக காலஞ்சென்று விட்டமையால், இத்தேர்தல் சமயத்தில் பார்ப்பன அரசியல் வாதிகள் தங்கள் சாமர்த்தியங்களையெல்லாம் காட்டுவார்கள். ஆதலால், வரப்போகும் பொதுத் தேர்தலில் சட்டசபைகளுக்குப் பார்ப்பனரல்லாதாரே பெரும்பாலோராகத் தேர்தெடுக்கப்படுவதற்கு நாம் பலமான முயற்சி செய்யவேண்டும். அதிலும் சமயவெறியும், சாதிப்பற்றும் அற்றவர்களாகவும், சுயமரியாதையாளராகவும் அவர்களிருக்க நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தத் தேர்தலில் அரசியல் கக்ஷியின் பெயரைமட்டும் வைத்துக்கொண்டு எவருக்கும் ஓட்டு வாக்கிக்கொடுத்து உயர்த்திவிடும் ஏணியைப்போல் நாமிருக்கலாகாது. சமூக சீர்திருத்தத்தில் ஆர்வம் உள்ள முற்போக்காளர் அதிகாரத்திற்கு வருதற்கு நாம் பாடுபட வேண்டும். அரசியல் போர்வையை மூடிக்கொண்டிருக்கும் சனாதன தர்மப் புரட்டர்களை வரப்போகும் தேர்தலில் தலைகாட்டாதடிக்க நாம் பிரயத்தனம் செய்யவேண்டும். சுயமரியாதைக் கொள்கைகளை ஒப்புக்கொள்ளும் பார்ப்பனரல்லாதாரே பெருந்தொகையாகத் தேர்ந்தெடுக்கப்படுமாறு நாம் பலமான பிரசாரம் செய்யவேண்டும். சட்டசபைகளுக்குச் செல்வோரிடம் இன்னின்ன கொள்கைகளுக்காக வேலை செய்வோம் என்பதாக உறுதிமொழி பெற்றுக் கொள்ளவேண்டும். சமூக சமயச்சீர்திருத்தங்களைக்கொள்கையாகக் கொண்டு வேலைசெய்ய மனதைரியமுடையவர்களுக்கே நாம் வாக்குத்தேடிக் கொடுக்க முயலுதல் வேண்டுமேயல்லாமல், அவர்களின் பண நிலைமையையோ, பெருமையையோ,படிப்பின் அருமையையோ-கவனிக்கக்கூடாது. தங்க ஊசியாயிருப்பினும் யார்தான் வயிற்றில் குத்திக்கொள்ள இசைவார்கள். நாற்காலியை அலங்கரிக்கும் பிரதிநிதிகள் நமக்கு வேண்டாம். பெருமைபெற்று இறுமாந்திருப்பதற்காகத் தேசத்தொண்டு புரிய எவரும் முன்வரவேண்டாம். படிப்பின் திறமையினால் பாமர மக்களை மயக்கிச் சுயநலமடையக் கூடியவர்களின் கூட்டுறவும் நமக்குத்தேவையில்லை நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், சமூக சமயச் சீர்திருத்தத்திற்காகவும் உண்மையுடன் வாக்குறுதி கொடுத்து அதினின்றும் தவறாமல் உழைக்கக் கூடியவர்களாகப் பார்த்து நாம் சட்டசபைக்குப்பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்தனுப்ப வேண்டும். அத்தகையோர் அரசியலாதிக்கம் பெற்றால்தான் நம் நாடும், நம் சமூகமும் விடுதலைபெறும்.தேர்தலில் நாம் செய்யக்கூடிய பிரசாரம் இவ்வழியில் தானிருக்கவேண்டுமேயன்றி, தனி மனிதரொருவருடைய பெருமைக்காகவும் பிரயாசை எடுத்துக் கொள்வதாயிருக்கக் கூடாது. சமூக இயலிலுள்ள தற்போதையக்கொடுமைகளை ஒழிப்பதற்குச்சட்டத்தின் உதவி இன்றியமையாதது. உடன்கட்டை ஏறுதலையும், கங்கையில் இரண்டறக் கலத்தலையும் சட்டத்தின் மூலம் தடுத்ததனால் தான் இக்கொடிய பழக்கங்கள் நிறுத்தப்பட்டன. அதைப்போன்றே, பால்யமணம், விபசாரவியாபாரம் முதலிய தீயவழக்கங்கள் நிறுத்தப்படவேண்டும். ஆகையால் சட்டசபைகளுக்கு இத்தகைய சீர்திருத்த நோக்கங்களில் பிரியமுள்ளவர்களாகவே பார்த்து அனுப்பவேண்டும்.இதற்குத் தீவிரமான பிரசாரமில்லாமல் முடியாது.

நமது திட்டங்கள்

இவ்வாறு நாம் செய்யவேண்டிய பிரசாரத்தில் சாதி பேதத்தைத் தகர்ப்பதையும், சமயப்புரட்டை ஒழிப்பதையும், பார்ப்பனீய ஆதிக்கத்தை (பார்ப்பனர்களையல்ல)த் தொலைப்பதையும் முக்கிய திட்டங்களாகக் கொள்ள வேண்டும். மதுவிலக்குப் பிரசாரத்தையும் ஒரு அம்சமாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் இவ்வழியில் எழும் கொள்கைகளை நாம் காரியத்தில் நடத்திக் காட்டவேண்டும். இந்த நமது கொள்கைகளையெல்லாம் அமுலுக்குக் கொண்டுவருவதில் பெண்களின் உதவியும் நமக்குத்தேவை.நமது நாட்டுப்பெண்கள் உலக இயலை அறிய வகையில்லாது பழையகுருட்டு எண்ணங்களுடன் வாழ்ந்துவரும் நிலையில் நமது முற்போக்கான எண்ணங்கள் அவர்களுக்குச் சம்மதமாயிருக்காது. ஆனால், நாம் அவர்களுக்குத் தகுந்தபடி அறிவு உணர்ச்சியுண்டாக்க வேண்டும்.எதுவரை நாம் நமது பெண்கள் வேலைக்காரிகளாகவும், பிள்ளைபெறும் இயந்திரங்களாகவும் மட்டும் வைத்திருக்கின்றோமோ, அதுவரை நமது சமூகத்திற்கோ, தேசத்திற்கோ முன்னேற்றம் கிடைக்கவே கிடைக்காது. ஆதலால் பெண்கள் விடுதலைக்காக நாம் பலத்த கிளர்ச்சிசெய்து அவர்களுக்கும் சுதந்தரம் ஏற்படுத்திக்கொடுக்க வகைசெய்யவேண்டும் நமது நாட்டுப் பொது வாழ்க்கையின் நோக்கமெல்லாம் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் போராட்டத்திலேயே சென்றுகொண்டிருந்தது. அம்முயற்சி முற்றிலும் வெற்றிபெறுதற்கு சமூக இயலில் செய்ய வேண்டிய வேலையே முக்கியம் என்ற நோக்கத்தின் பேரில் நமது இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. சொற்பகாலத்திற்குள்ளாக நாம் நினைத்த உண்மை யாவராலும் ஒப்புக்கொண்டாற்போல காரியங்கள் நிகழுவது நமதியக்கத்திற்கேற்பட்ட வெற்றிக்கு அறிகுறியாகும். அரசியலின் பேரைச் சொல்லி வாக்குக்கேட்டவர்களெல்லாம் இப்பொழுது மதத்தின் பெயரையும் சமூகத்தின் பெயரையும் கூறிக்கொண்டு தேர்தல் பேச்சு பேசவந்துவிட்டதே இதை மெய்ப்பிக்கின்றது. நாம் இன்னும் தீவிரமாகப் பிரசாரம்செய்தோமானால் அதற்குத் தக்க பலன் கிடைக்குமென்பதில் ஐயமில்லை.

அமைப்பு

நமதியக்கத்திற்காகப் பிரசாரம் செய்வது தொண்டர்களாகிய நமது இன்றியமையாத கடமையாகும். அப்படிப் பிரசாரம்செய்வதற்குப் போதிய உதவிகளைச் செய்ய வேண்டியது நமது பெரியார்களின் கடன். பிரசாரம்செய்வதற்கென கட்டுப்பாடான ஏற்பாடும், தொண்டர்களுக்கெனத் தனியாக ஒரு அமைப்பும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். பிரசாரம் செய்வதற்குத்தொண்டர்களை நன்கு பயிற்சி செய்துவிடவும் வேண்டும். தொண்டர்களெல்லாம், நமது கொள்கைகளைத் தவறில்லாமல் எடுத்துக் கூறுவதற்கு இவ்வாறு பயிற்சியளிப்பது மிகச் சிறந்த சாதனமாகும். நமது இயக்கத் தலைவர், சுயமரியாதைத் தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டியதற்காக ஏற்படுத்த உத்தேசித்திருக்கும் ஸ்தாபனத்தை சீக்கிரம் ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொண்டர்களுக்கென ஒழுங்குக்குட்பட்டதும், கட்டுப்பாடுடையதுமான அமைப்பில்லாமையாலும், அவர்கள் பிரசாரம் செய்வதற்கு வேண்டிய வசதிகளுக்கு முறையாகக் கிடைக்கக்கூடிய உதவிக்கு வழியில்லாதிருப்பதாலும், பெரும்பாலான தொண்டர்களுக்கு மிகுந்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுகின்றன. இப்பல கஷ்ட நஷ்டங்களுக்கிடையே அவர்கள் தங்கள் கொள்கைகளுக்காக ஊசலாடிக்கொண்டு தொண்டுசெய்து வருகின்றனர். இதைப்போக்கி அவர்களுக்குப் பலத்த ஆதரவுகளையமைத்துக் கொடுக்க வேண்டியது தலைவர்களது கடமை. ஏதோ பொது மேடைகளில் தலைவர்களென வந்து பேசிவிட்டுப் போவதும், வீட்டுக்குச் சென்றதும் யாருக்கோ வந்த விருந்தென வாளாயிருப்பதும் சரியல்ல. அவர்கள் கொள்கைகளுக்காகத் தலைவர்களாக ஏற்பட்டார்களென்னில், கொள்கைகளுக்காகக் கஷ்டப்பட முன்வந்த தொண்டர்களுக்கு ஆதரவு புரியவேண்டும். கொள்கைகளுக்காகவலலாமல், ஏதோ காரியத்திற்காகத் தலைவர்களாக ஏற்பட்டவர்களாயிருந்தால், அத்தகைய வேஷதாரிகளின் நடிப்பை வெளிப்படுத்திவிடத் தொண்டர்கள் தவறவும் கூடாது. மேலும், தொண்டர்களாகிய நாமும் கொள்கைகளுக்காகவே உயிர் விடவும் தயாராயிருக்கவேண்டும். தொண்டர்களாகிய நாம் வீண் பெருமைக்காக ஆசைப்பட்டவர்களாகவோ, தியாகபுத்தியற்றவர்களாகவோ இருக்கக்கூடாது. உண்மைத் தொண்டர்கள் தாங்கள் மேற்போட்டுக்கொண்ட பணியில்மெய்வருத்தப்பாரார், பசி நோக்கார், கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார், காலத்தின் அருமையைக் கவனியார், அவமதிப்பும் கொள்ளார். இவ்வுத்தம உணர்ச்சிகளுடன் தனக்கெனவல்லாது பிறர்க்கென தொண்டுசெய்தலே நமது தொண்டர்களின் நோக்கமாயிருக்கவேண்டும். நாம் இதற்கென ஒருமுறையான அமைப்பும் ஏற்படுத்திக்கொண்டு நமது தலைவர்களின் பேராதரவினால் நமது புனித இயக்கத்திற்குத் தொண்டுபுரிய மனதை திடப்படுத்திக்கொள்வோமாக. நாம் செய்யவேண்டிய வேலைகளெல்லாம் கிராமங்களில்தான் அதிகமாகச் செய்யப்பட வேண்டியிருக்கின்றன. இளந்தொண்டர்களாகிய நம்போன்றோர்களால் தான் இத்தகைய வேலைகளை வெற்றிபெற நடத்தி வைக்கக்கூடும் துருக்கி, சீனா, ஜப்பான்போன்ற வெகு துரிதத்தில் முன்னேற்றமடைந்த தேசங்களில் நம்போன்ற இளைஞர்களின் தியாகவுணர்ச்சி பெற்ற உழைப்புத்தான் பயனளித்தது. அதைப்போன்றே நமது சுயமரியாதைத் தொண்டர் படையும் உதயமாகி நமது நாட்டிற்கும் நமது சமூகத்திற்கும் நலம் புரியட்டும்! தொண்டர் மகாநாட்டில் குழுமியுள்ள நாம் இக்காரியங்களை நன்கு யோசித்து தக்க முடிவுக்கு வருவதுடன் நேர்மையான தீர்மானங்களைச் செய்து அதன் வழி நடக்கவேண்டும் என்பதையும் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

முடிவுரை

இறுதியாக, அன்பர்களே!! இன்னும் அதிகமாக உங்கள் விலையுயர்ந்த காலத்திற்குக் குறுக்கே நிற்க மனமில்லாமல் எனது பிரசங்கத்தை இத்துடன் முடித்துக் கொள்வதுடன் வரவேற்புக் கழகத்தின் சார்பாக மீண்டும் உங்களை வரவேற்று, வரவேற்புக் கழகத்தாராகிய நாங்கள் உங்கள் சௌகரியங்களுக்காகச் செய்துள்ள ஏற்பாடுகளில் ஏதேனும் குறையிருக்குமானால் அதற்காக எங்களிடம் பொறுமை காட்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கும் சமத்துவம் ஓங்குக! என்றும் சுயமரியாதை வெற்றி பெறுக!! எல்லா உயிரும் இன்புற்றிட நினைக்கும் நம் இயக்கம் வாழ்க!!!